"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

மலர் 03 ★ இதழ் 01

# சிவநெறி
# SIVANERI
## முத்திங்கள் சஞ்சிகை

ஸ்ரீ முக வருஷம் ★ 1993 ஐப்பசி கார்த்திகை மார்கழி

## அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் நினைவு இதழ்



### வாரியார் சுவாமிகளை வாழ்த்தி வணங்குவோம்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு

விலை ரூபா 10-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருக கிருபானந்தவாரியாரின்

# சிந்தனைத் துளிகள்

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்
காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி
வாக்குக்கு அணிகலம் சத்தியம்
கருத்திற்கு அணிகலம் தானதர்மம்
மனத்திற்கு அணிகலம் தியானம்.

இறைவனே! இன்று நான் நல்ல வழியில் நிற்க அருள் செய்.

எழுந்தவுடன் இறைவனை ஒரு கணமாவது நினை.

இறைவனை அன்பினால் வணங்கு அவரிடம் வியாபாரம் பண்ணாதே.

உடம்புக்குள் உறையும் உயிருக்கு உறுதி தேடு.

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களை துணையாகக் கொண்டு ஒழுகு.

கல்வியின் பயன் கடவுளை அறிதல்.

இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பம் அறிஞர்களோடு பழகுவது.

ஓதலின் நன்று ஒழுக்கமுடமை.

நீ எப்போதும் பெரியோரை துணைகொள்.

நீ இரவில் படுக்கும் போது இன்று என்ன செய்தாய் என்பதை எண்ணிக் கொள்,

தூக்கம் வராத போது அறநூல்களைப் படி, தூக்கம் வரும்போது படுத்துறங்கு.

அறிவையும் அன்பையும் கெடுக்கக் கூடிய ஆகாரத்தை அருந்தாதே.

அறநூல்களுடன் பழகாதவர், பல்லோராலும் பழிக்கப்பட்டு தாழ்வடைவர்.

நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே, பாவத்தை கூறு

இகழையும் புகழையும் சமமாகக் கருது. அதனால் உன் மனது அமைதியாக இருக்கும்.

நீ பிற உயிர்களிடம் கருணை செய்தால் கடவுள் உன்னிடம் கருணை செய்வார்.

நரைக்கத் தொடங்கும் போதாவது உன் ஆவி ஈடேறும் நெறியில் செல்.

வீரமும் புகழுமில்லாமல் நெடுங்காலம் இருப்பதை விட வீரமும் புகழும் பெற்று நெடுங்காலம் வாழ்வது சிறந்தது

புலன்களை வென்றவனே வீரன் இறைவனுடைய இலக்கணங்களை உணர்ந்தவனே ஞானி

துன்பங்களைப் பொறுப்பவனே தவசி

விருந்தினருக்கென்று வாழ்பவனே இல்லறத்தான்

கொடுக்காமல் பொருளை திரட்டி வாழ்பவனே இறந்தவன்.

மெய் அழுக்காவன — கொலை, புலை, பிறன் மனை நயத்தல், களவு முதலியன.

இறைவன் அருளால் கிடைத்ததை உண்டு திருப்தியடை.

கிழக்கு நோக்கி உண்பார்க்கு ஆயுள் வளரும், மேற்கு நோக்கி உண்பார்க்கு பொருள் சேரும், தெற்கு நோக்கி உண்பார்க்கு புகழ் சேரும் வடக்கே நோக்கி உண்பார்க்கு நோய் வரும்.

ஆரோக்கியம் பெறணும்னா ஆதித்தனை வணங்கு,
ஞானம் பெறணும்னா முருகனை வணங்கு,

ஆற்றல் பெறணும்னா அம்பிகையை வணங்கு,
செல்வம் பெறணும்னா அக்கினியை வணங்கு,
சுகம் பெறணும்னா திருமாலை வணங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

நல்ல சொற்பொருணாளு நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்லவைக்குரி யானை வழுத்துவாம்.

உ
சிவமயம்



## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

சைவத்தமிழ் பேரறிஞர் தவத்திரு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் மறைவு குறித்த நினைவுரை 19-12-1993 பி.ப. 4.00 மணிக்கு தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரியில் நடைப்பெற்றது.

இந் நிகழ்வினை திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சமயக்குழு. திருக்கோணமலையின் இந்து நிறுவனங்கள், இந்து ஆலயங்கள் என்பவற்றோடு இணைந்து நடைமுறைப் படுத்தியது இந் நிகழ்வு திருக்கோணமலை மாவட்ட மக்களின் நிகழ்வு என்றால் மிகையாகாது.

வாரியார் சுவாமிகளின் மறைவைக் கேட்ட சைவத் தமிழ் உலகம் பேரதிர்ச்சிக்குள்ளானது அவ் வேளை திருக்கோணமலை மக்களும் ஆராத்துயரில் ஆழ்ந்திருந்தனர். ஈடுசெய்ய முடியாத இப் பேரிழப் பினை நினைவு கூர்ந்து அனுதாபச் செய்தியை வாரியார் குடும்பத்திற்கு அனுப்பி வைத்தனர்.

தி.மா.இ.இ பேரவை தனது முத்திங்கள் ஏடான சிவநெறியை வாரியார் சுவமிகளின் நினைவு மலராக வெளியிட முன் வந்தது. திருக்கோணமலை மாவட்டத்தில் சைவத் தமிழ் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ள இப்பேரவை இப்பணியில் தன்னை ஈடு படுத்தியதில் வியப்பொன்றும் இல்லை.

வாரியார் சுவாமிகளின் மறைவு கண்டு வருந்தும் நாம் அவரின் சைவத்தமிழ் பணிகளை மேடைகளில் நின்று வாழ்த்தும் நாம் அவர் ஆற்றிய பணிகளை சிந்தனையில் கொள்ள வேண்டியவர்களாவோம். அவர் ஆற்றிய இலட்சியப் பணிகள் எல்லாவற்றை யும் எம்மால் ஆற்றமுடியா விட்டாலும் முடிந்த வற்றைச் செய்வதன் மூலம் தான் அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்தவர்கள் ஆவோம்.

இன்றைய கல்வி முறையை மனப்பாடம் செய்தல் எனும் மிக முக்கிய அம்சம் குறைவாகக் காணப் படுகிறது. இதனால் விருப்புடன் பாடம் செய்யும் மாணவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். தமிழ், இலக்கண இலக்கிய அறிவும், சமய அறிவும் குறைந்து கொண்டு போவது தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் கவலைக்குரியதும் வேதனைக் குரியதுமான விடயமாகும். வாரியார் சுவாமிகளின் புகழ்பூத்த வாழ்விற்கு தமிழும் சமயமுமே சாதன மாக அமைந்தன.

எமது சமுதாயத்தின் கலாச்சார சின்னங்களால் தமிழும், சமயமும் எமது இரு கண்களாகப் போற் றப்பட வேண்டும் மனப்பாடம் செய்தல் மூலம் வாரியார் சுவாமிகள் சைவத்தமிழ் பெருஞானியாக விளங்கியது போல் எமது வருங்காலச் சமுதாயமும் முயன்று முன்னேற வேண்டும். வாரியார் சுவாமி களுக்கு அவரது தந்தையாரே குருவாக அமர்ந்து ஆத்மஞானத்தைப் போதித்தது போல் குருசீட பரம் பரை எழுச்சிப் பெற வேண்டும். பன்னிரண்டு வய தில் பத்தாயிரம் பாடல்கள் தனது தந்தையாகிய குருவுக்கு ஒப்புவித்துள்ளார். மனப் பாடம் செய்தலே அவரை ஞானகுருவாக்கியது மனப்பாடம் செய்தலை மாணவர்கள் கைக்கொள்ளும் அரும் பணியை ஆற்று வோம். சைவத்தமிழ்ப் பணியின் மூலம் வாரியார் சுவாமிகளின் பணி தொடர்வோம். கணீரென்ற குரலால் அவர் கூறும் முருகநாமம் என்றும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கட்டும்.

— ஆசிரியர்


## சஞ்சிகைக் குழு

★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
★ திரு. க. சவுந்தரராசா துணைஆசிரியர்
★ திரு. வ. தங்கராசா
★ திரு. செ. சிவபாதசுந்தரம்
★ திரு. சு. கனகசபாபதி
★ திரு. நா. காளிராசா
★ திரு. கெ. தர்மகுலராசா
★ திரு. செ. ஜெயச்சந்திரன்
★ திரு. பூ. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரி வழங்கிய வாரியார்சுவாமி

ஞானசிரோன்மணி சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல்

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட மகானுபாவர். வாரியார் என்பது சமுத்திரம். முத்தும், மணியும் மற்றும் கடல்படு திரவியங்களையும் வாரி வழங்குகின்ற சமுத்திரம் போல இயற் தமிழையும், ஆன்மீக நெறிகளையும் வாரி வழங்கிய தமிழ்க்கடல் திருமுருக கிருபானந்தவாரியார்.

வாரியார் என்று சுருக்கமாக அன்போடும், மரியாதையோடும், உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் மத்தியில் பிரபலமாகியிருந்தவர் திருமுருக கிருபானந்த வாரியார், அவருடைய பெயரிலேயே அழகு - தமிழ் - அருள் - இன்பம் - கடல் - நிறைவு ஆகியவை அடங்கியிருக்கின்றன. திரு - அழகு; முருகு- தமிழ், கிருபை - அருள், ஆனந்தம் - இன்பம், வாரி - கடல், மரியாதைப் பன்மை விழுதியாகிய ஆர் என்பது நிறைவு.

## அறநெறியாளர்:

தமிழ் இலக்கிய இலக்கணங்கள், தமிழிசை, வேத சிவாகம சாஸ்திரங்கள், தோத்திரங்கள் முதலியவற்றைக் கற்றுக் கரை கண்டு நிறைவுற்றுத் திகழ்ந்த தமிழ்ச் செம்மல்.

இந்த நூற்றாண்டில் தன் வாழ்நாளில் ஒரு நாள் கூட ஓய்வில்லாது தான் ஏற்றெடுத்துக்கொண்ட நெறிக்காக நாடு முழுவதும் சுற்றித் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பெருந்தகையாளர் கடைசி மூச்சைக் காற்றில் கலப்பதுவரை தமிழுக்காகவும், ஆன்மீக நெறிக்காகவும் பாடுபட்ட சான்றோர் அவர். அறநெறியையும், ஆன்மீக உணர்வையும், தமிழ்மொழி உணர்வோடு கலந்து மக்களுக்கு வழங்கிய ஒரு மாபெரும் அறநெறித் தொண்டராக விழங்கியவர். அவர்பிறருக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்கினாரேயல்லாமல், அவருக்கு எடுத்துக் காட்டு என்று எவருமில்லை.

## நடமாடும் பல்கலைக்கழகம்:

கல்லார்க்குங், கற்றவற்கும், நல்லார்க்கும், வல்லார்க்கும், ஆன்ம நேயத்திலும் பக்தி இயக்கத்திலும் ஒரு பல்கலைக்கழகமாக விளங்கியவர் கிருபானந்தவாரியார். டாக்டர்ப் பட்டம் பெற்ற வாரியார் சுவாமிகள் தமது வாழ்நாளில் எந்த ஒரு ஆரம்பப் பாடசாலையிலோ, கல்லூரியிலோ, பல்கலைக்கழகத்திலோ கல்வி கற்கவில்லை.

ஆனால் கல்வியும், கலைகளும், கலாச்சாரமும் நிறைந்த ஆசானாக அவர் வாழ்ந்தார். மூன்று வயது தொடக்கம் அவருடைய தந்தையாரே அவருக்குச் சகல கலைகளையும் கற்பித்த குருவாக வாய்க்கப் பெற்றனர். திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாத சுவாமிகளை மானசிக ஞானகுருவாகப் பெற்றவர். சென்னையில் பிரம்மஸ்ரீ தென்மடம் வரதாச்சாரியாரிடம் வீணை பயின்றவர்.

## அறிவும் ஆற்றலும்:

துள்ளி விளையாடும் பருவத்திலே பள்ளிக்குச் செல்லாது அள்ளக் குறையாத ஆயகலைகள் யாவற்றிலும் அறிவாற்றல் பெற்றிருந்த வாரியார் பன்னிரண்டு வயது நிரம்பும் போதே பத்தாயிரம் பாடல்களை மனப்பாடம் செய்திருந்தார். எட்டு வயதிலே வெண்பா பாடும் ஆற்றல் கைவரப் பெற்றிருந்தார். ஐந்து வயதில் திருவண்ணாமலை பாணிபத்திர மடத்தில் லிங்கதாரணம் செய்விக்கப் பெற்ற, தந்தையாரால் சடாட்சர மந்திரம் உபதேசிக்சப் பெற்றார். பழனி சைவசித்தாந்த சரபம் சிவத்திரு ஈசான சிவாச்சாரிய சுவாமிகளிடம் நிர்வாண திட்சை பெற்று ''வாமதேவசிவம்'' எனும் தீட்சா நாமம் சூடப் பெற்றார். பத்தொன்பதாம் வயதிலே தனது தாய்மாமன் மகளான அமிர்தலட்சுமி அம்மையாரை இல்வாழ்க்கை துணைவியாக ஏற்றுக் கொண்டார். 1986ம் ஆண்டில் மனையாலும் சிவபதம் அடைந்து விட்டார். மக்கட்செல்வமில்லாவிடினும் அருட்செல்வத்தையும், பொருட்செல்வத்தையும், நிறையப் பெற்றிருந்தார். அவற்றையெல்லாம் வாரிவழங்கும் வள்ளலாக வாழ்ந்து வந்தார் திருமுருக கிருபானந்தவாரியார்.

## கொடைவள்ளல்:

கிள்ளிக் கொடுக்கவே கீழ்க் கணக்குப் பார்க்கும் இவ்வுலகு அள்ளிக் கொடுப்பதையே அன்றாடக் கடமையாகக் கொண்டவர்; என்ற காஞ்சிப் பெரியார் பரமாச்சாரிய சுவாமிகளால் பாராட்டப் பெற்று காஞ்சிப் பரமாச்சாரியர் சந்திரசேகேந்திர சுவாமிகளால் ''கொடைவள்ளல்'' என்று கௌரவிக்கப்பட்டவர். வாரியார் சுவாமிகள் அருணகிரிநா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர் சுவாமிகள் அறக்கட்டளை போன்ற பல நிலையான தர்மங்களையும், அநாதைக் குழந்தைகளின் கல்விக்கும், ஏழைகளின் உணவு, உடை முதலியவற்றுக்கும் தமது பொருள் முழுவதையும் தனக்கின்றித் தானம் செய்த பரோபகாரியராகிய திருமுருக கிருபானந்தவாரியார் கடந்த எழுபது ஆண்டுகளாக மக்களின் மனதைக் கவரும் வகையில் பக்திப் பிரசங்கங்கள் செய்து வந்தார்.

### கதாப்பிரசங்கவாரிதி;

இராமாயணம், புராணங்கள், திருமுறைகள், சாஸ்திரதோத்திரங்கள், என்பவற்றில் ஆழ்ந்த அறிவும் தெளிந்த ஞானமும் உடையவர். கேட்டாற் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் ஞானமும் ஆற்றலும் நிறைந்த கிருபானந்தவாரியார் பாமரரும், பண்டிதரும் வியந்து போற்றிப் பயன்பெறும் வகையில் கதாபிரசங்கங்கள் செய்து வந்தார்.

அவருடைய பிரசங்கங்களிலே ஞானசம்பந்தருடைய கொஞ்சும் தமிழையும், சுந்தரருடைய மிஞ்சும் தமிழையும், மாணிக்கவாசகருடைய நைஞ்சும் தமிழையும், கேட்டு அனுபவிக்கலாம் முருக பக்தராகிய வாரியார் சுவாமிகள் திருப்புகழ் அமிர்தத்தை உண்டு வழங்குவதை எல்லாப் பிரசங்கங்களிலும் கேட்கலாம். உண்பது தனக்காக, வழங்குவது மக்களுக்காக, தான் பெற்ற தமிழின்பத்தை பெறுக இவ்வையகம் என்ற பரோபகாரம் அவருடைய பிரசங்கங்களில் தொனிக்கும். கற்றலில் கேட்டல் நன்று. நூல்களைத் தோளில் சுமப்பதைவிட, வாரியாருடைய பிரசங்கங்களை கேட்டு நூல்கள் கூறும் விழுப்பொருளை நெஞ்சிலே சுமக்கும் உணர்வு மக்களிடம் விரவியிருந்தது.

### திருப்புகழமிர்தம்:

சங்ககால இலக்கியங்கள் முதல் பிற்காலப் பிரபந்தங்கள் வரையுமுள்ள சகல நூற் செய்யுட்களும் யாப்பிலக்கண வரம்புக்குட்பட்டு யாக்கப்பட்டிருக்கின்றன சந்தக்கவியாகிய அருணகிரிநாத சுவாமிகள் மாத்திரம் தான் ஓசையை ஆதாரமாகக் கொண்டு திருப்புகழை யாத்தார். என்பதை வாரியார் சுவாமிகள் விளக்கிக் கூறியுள்ளார். திருப்புகழ் அமிர்தத்தை வாரி வழங்கிய வாரியார் அவர்கள் ''திருப்புகழ் அமிர்தம்'' என்ற சஞ்சிகையை முப்பத்தேழு வருடங்களாக வெளியிட்டு வந்தார். பரிமேலழகர் திருக்குறளுக்கு உரைவளங்க கண்டது போல கிருபானந்த வாரியார் திருப்புகழ் விளக்கவுரையை ஆறுபாகங்களாக வெளியிட்டுள்ளார்.

### வயலூர் முருகன்:

வாரியார் சுவாமிகள் செய்த ஆலயத் திருப்பணிகள் ஏராளம் அவற்றுள் வயலூர் முருகனாலயத் திருப்பணி திருத்தணிகை திருப்பணி என்பன மேன்மையானவை. வயலூர் முருகன் அவருடைய குலதெய்வம் வயலூர் முருகனுடைய திருவுருவத்தைப் பஞ்சலோகத்திலே செய்வித்து ஒரு பேழையிலே வைத்திருந்தார். தினமும் அதற்குப் பூஜை செய்த பின்புதான் தண்ணீர் பருகுவார். வெளியூர்களுக்குக் கதாபிரசங்கம் செய்யப் போகும்போது வயலூர் முருகனையும் உடன் கொண்டு சென்று அங்கங்கே பூஜையை நிறைவேற்றிய பின்புதான் பிரசங்கம் செய்வார்.

### பிரசங்கயுத்தி:

பிரசங்கம் ''கைத்தல நிறைகணி'' என்ற திருப்புகழோடு ஆரம்பமாகும். பேச்சு ஆரம்பிக்கும் போது ''ஞானமே வடிவாகிய வயலூர் எம்பெருமானுடைய தனிப்பெருங் கருணையினாலே'' என்று தொடங்கும். ''உருவாய் அருவாய்'' என்ற கந்தரனுபூதிப் பாடலோடு பிரசங்கம் நிறைவடையும். இலக்கியப் பிரசங்கமானாலும் இதிகாசப் பிரசங்கமானாலும், புராணப்பிரசங்கமானாலும், பிரசங்க ஆரம்பமும் முடிவும் முன்கூறியவாறே அமையும்.

புன்னெறியதனிற் செலும் போக்கினை விலக்கி மக்களையெல்லாம் நன்னெறிக்கண் நெறிப்படுத்தும் குறிக்கோளுடன் வாரியார் சுவாமிகள் பிரசங்கம் செய்வார். பிரசங்கங்களில் பண்டிதர்களுக்கும் பாமரருக்கும் ஏற்றவகையில் ஞானவிருந்தளிப்பார். வைதீகர்களுக்கும், லௌகீகர்களுக்கும், விருந்தளிப்பார். சிவாச்சாரியார்களுக்கும் சினிமா ரசிகர்களுக்கும் விருந்தளிப்பார். வாரியாரின் சொல்விருந்தை அனுபவித்த ரசிகர்கள் சொல்விருந்தைச் சீரணித்து, வாரியார் வாயிலாக வரும் வருவிருந்தை அனுபவிக்க எதிர்ப் பார்த்திருப்பார்கள்.

### தத்துவஞானி:

குட்டிக் கதைகள் மூலம் உயர்ந்த தத்துவங்களை உணர்த்துவதில் சதுரர், சைவ, வைஷ்ணவர்களின் மதக் கோட்பாட்டு மயக்கத்தை களைந்து சமரச ஞானத்தை உணர்த்துவதற்காக கூறினார். சைவர்களும், வைஷ்ணவர்களும் அரிசியை அரிசியென்று சொல்லமாட்டார்கள். வேறு சொல்லை சொல்லுவார்களாம். ஏனென்றால் அரிசி என்ற சொல்லிலுள்ள அரிவைஷ்ணவ நாமம் ''சி'' சிவநாமம் சைவன் அரி என்று கூறமாட்டான். வைஷ்ணவன் சிவன் என்று கூறமாட்டான். அரி - சிவா, அரி-சிவா, என்று சமரசமாகக் கூறி வழிபடாத இவர்களுக்கு அடுத்த ஜென்மத்தில், அரிசி வராது நீரழிவுதான் வரும் என்பார்.

புராணக் கதைகளைக் கூறும்போது அவற்றிள்ள வேதாந்த, சித்தாந்த தத்துவங்களை மிக எளிமையாக விளக்கிக் கூறுவார். வள்ளியம்மை திணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் வளர்த்த அருந்தவப் புதல்வர், சுவாமி கிருபானந்தவாரியார்.

## (திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் நினைவஞ்சலியின் தலைமையுரை)

திரு. நா. புவனேந்திரன், மேலதிக அரசாங்க அதிபர் திருக்கோணமலை

இந்துமத வரலாற்றில் காலத்திற்குகாலம் பல ஆன்மீகப் பெரியார்கள் தோன்றி, மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு அவ்வப்போது எதுஎது தேவையோ அவைகளை இனம் கண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, மக்களை ஆன்மீக வளர்ச்சியில் முன்னேறிச் செல்ல தூண்டுகோலாக இருந்தார்கள். இந்த வகையில் நம் வேதகால ரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், எண்ணற்றசித்தர்கள் தோன்றி எமது இந்துமத வரலாற்றில் எமக்கெல்லாம் ஆன்மீக வளர்ச்சியில், ஒளியூட்டும் வழிகாட்டிகளாகத் திகழ்ந்தார்கள்.

இந்த வகையில் நாம் வாழும் கலியுகத்தில் பகுத்தறிவு வாதம் தலைதூக்கி எமது இளைஞர்கள் யுவதிகளையெல்லாம் திசைதிருப்பி, இந்துமதத்தின் இணையற்ற தத்துவப் பொக்கிஷங்களையெல்லாம் அர்த்தமற்றவை என விளம்பரப்படுத்தப் புறப்பட்ட காலகட்டத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் தோன்றி தன் பிரசங்கங்கள் மூலம் எமக்கு ஒளி ஊட்டப் புறப்பட்டார். தமிழ் கூறும் நல்லுலகில் மூலைமுடுக்கெல்லாம் சென்று அக்கால கட்டத்தின் சவாலை நிதானமாகவே நேர்கொண்டு அதில் லாவகமாக வெற்றியும் கண்டார்.

இந்துமதத்தில் காலத்திற்குக்காலம் வந்துசேர்ந்த வேண்டாத மூடநம்பிக்கைகளை கிருபானந்தவாரியாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக எங்கோ ஒரு மூலையில் வந்துசேர்ந்த மூடநம்பிக்கைகளை விலக்கிவிடுவதற்குப் பதிலாக முற்றாக இந்து மதத்தின் அடிப்படையையே எதிராக விமர்சித்த காலகட்டத்தில் வாரியார் சுவாமிகள் தன்பிரசங்கங்கள் மூலம் மக்களுக்குத் தேவையான உண்மையை தெளிவுப்படுத்தினார்.

ஏட்டையே தொட்டிராத படித்தறியாபாமரமக்கள் தொட்டு பல்கலைக்கழக பேராசிரியர்வரை எல்லோர்க்கும் தெளிவாகப் புரியும் வண்ணம் ஒரே பிரசங்கத்தில் இந்துமதத் தத்துவங்களை இலகுவான உதாரணங்களோடு மிகத் துல்லியமாக விளங்கவைத்தார்.

இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்களை பழைய புராணங்களில் இருந்து உதாரணக் கதைகள் மூலம் விளக்குப் போது ஒரு சிறு பிள்ளை கூட அதன் தாற்பரியத்தை புரியும் வண்ணம் தெளிவுபடுத்துவார். அவர் கதாபிரசங்கம் செய்யும் போது அதைக் கேட்டுக் கொண்டு இருப்பவர்கள் தம்மையே மறந்து விடுவார்கள். தமக்கு எங்கோவந்த சந்தேகங்களுக்கெல்லாம் பதில் கூறுவது போன்ற உணர்வுகளைப் பெறுவார்கள். பரிபூரணமான ஆன்மீக அநுபவங்களோடு பேரானந்தம் அடைவார்கள்.

எனவே திருமுருக கிருபானந்தசுவாமிகள் எமது இந்துமதத்திற்கு செய்த சேவை காலத்தால் அழியாதது எமது சமயத்திற்கு செய்த சேவை மூலம் எமது இந்துமதப் பண்பாட்டை கட்டிக் காத்து நின்றார். எமது இந்துமத கலாச்சாரத்தைத் தலைநிமிர்ந்து நிற்கவைத்தார். இதனால் தமிழ் கூறும் நல்லுலகம் அவரை என்றென்றும் தம் இதயத்தில் வைத்து, காத்து போற்றிவரும் என்பது திண்ணம்.

---

## வாரி வழங்கிய. . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னம் காத்த வரலாற்றை ''உள்ளமாகிய வயலிலே ஆணவமாகிய காட்டை வெட்டி, அகங்காரமாகிய கல்லைப் பிளந்து, மௌனம் என்ற வித்தை விதைத்து அன்பு என்ற தண்ணீரைப் பாய்ச்சி, ஞானமாகிய பயிர் விளைகின்ற பொழுது, சாந்தமாகிய வேலி கோலி, அந்த ஞானப்பயிரிலே முத்திக் கதிர் தோன்ற, அதைப் பாழ்படுத்த, காம, குரோத, லோப, மோக, மதமாற்சரியம் முதலிய பறவைகள்வர, ஜீவாத்மாவாகிய வள்ளி, திடப்பிரக்ஞை என்ற பரண்மேலமர்ந்து, பக்தி என்ற கவணிலே, பகவான்நாமமாகிய கல்லை வைத்து பறவைகளை ஓட்டித் தினைப் புனம் காவல் செய்தாள் வள்ளி. இப்படி ஜீவப் பிரம்ம ஐக்கிய சாதனைக்குரிய தத்துவத்தைப் பண்டிதர்களுக்கு விருந்தாக அளிப்பார் வாரியார். சம்பூரண ராமாயணக் கதாப் பிரசங்கத்திலே தத்துவார்த்த ராமாயணத்தை அதிஅற்புதமாக விளக்கியுள்ளார்.

### திருமுறைக்கு வாரியார் விளக்கம் :-

திருமுறைகளிலுள்ள பாடல்களுக்கும் இவ்வாறே சைவசித்தாந்த தத்துவங்களை எடுத்துக்காட்டி விளக்கம் கூறியுள்ளார்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சந்தேகம் தெளிதல்★

விடையளிப்பவர்: ஞானசிரோன்மணி, சைவப்புலவர், பண்டிதர், இ. வடிவேல்.

★ பிரமோற்சவ காலத்தில் அதாவது இறைவனால் காக்கப்படுவது இவ்வுலக உயிர்களாகும். அப்படிப் பட்ட இறைவனுக்கும் பரிவாரக் கடவுளர்க்கும் பிர மோற்சவத்தில் காப்புக் கட்டலாமா? அருள்பாலிக்கும் கடவுளுக்கு காப்புக் கட்டுவதை ஆகமம் ஏற்கிறதா? அவ்வாறாயின் விளக்கம் தருக. மகோற்சவ காரியங்கள் யாவும் மங்களகரமாக நிறைவேற வேண்டும் என்று சங்கல்பித்துக் கொள்ளும் கிரியைதான் காப்புக் கட்டுதல். இது மூர்த்திகளைக் காப்பாற்றுகின்ற காப்பு அல்ல.

★ பிரமோற்சவ காலத்திலோ வேறு விசேட உற்சவ காலத்திலோ சிவாச்சாரியார்கள் (அந்தணர்கள்) தம்மை சிவமாக பாவனை செய்து தமக்கு தாமே அர்ச்சனை மற்றும் கிரியைகளை செய்வது ஏன்? அவ்வாலய கடவுளுக்கும் ஒப்பானவரா? இதனை ஆகமம் வேதம் ஏற்கிறதா? விளக்கம் தருக. எவ்வகையான சிவக்கிரியைகளை செய்யும் போதும் எவராய் இருந்தாலும் தன்னைச் சிவனாக பாவனை செய்து தான் கிரியைகள் செய்ய அருகதையுடைய வராகிறார். ஆகம சாஸ்திரம் இதனையே கூறுகின்றது சிவோகம் பாவனையில் இருக்கும் எவரும் தெய்வத்துக்கு ஒப்பானவர்.

★ நாயன்மார்களுள், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரா மாணிக்கவாசக சுவாமிகளா, காலத்தால் முற்பட்டவர்கள் வரலாற்று ரீதியில் விளக்கமளிப்பீர்களா? திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மாணிக்கவாசக சுவாமிகள் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகவும் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதால் யார் முதியவர் எனக் கூறுவது சுலபமல்ல.

★ இளநீரை, பசுப்பாலை செம்பு போன்ற உலோகப் பாத்திரத்தில் எடுத்து அபிஷேகம் செய்யக் கூடாது என சைவ கிரியை நூல் கூறும்போது குருக்கள்மார் சில ஆலயங்களில் மேற்படி உலோகப் பாத்திரத்தில் ஊற்றி அபிஷேகம் செய்கிறார்களே இது பற்றி நீங்கள் கூறும் கருத்து யாது? சைவக் கிரியை நூல் சொல்வதன்படி செய்வது தான் உத்தமம். செம்பு போன்ற பாத்திரங்களில் எடுத்து அபிஷேகம் செய்வது மத்திமம். போத்தல் போன்றவற்றில் எடுத்துச் செய்வது அதமம்.

★ இந்துக்களின் மரணக் கிரியை செய்யத் தகுந்த குருமார் யார்? இவர்கள் ஆலய பூசை செய்ய ஏற்புடையவர்களா? சைவக் குருக்கள்மார் அபரக் கிரியை செய்வதற்கு அதிகாரம் உடையவர்கள். அவர்கள் தங்களை சிவனாகப் பாவனை செய்து கொண்டு கோயிலில் பூசை செய்தால் ஏற்புடையவர்கள்.

---

**வாரி வழங்கிய. . . .**

(5ம் பக்கத் தொடர்ச்சி)

''வளைத்து நின்று ஐவர்கள்வர் வந்தெனை நடுக்கம் செய்ய
தளைத்துவைத் துலைய ஏற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்து நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்து நின்றாடுகின்றேன் என்செய்வான் தோன்றினேனே''

இது அப்பரடிகள் அருளிச் செய்த திருநேரிசை. இத்தேவாரத்திற்கு வாரியார் அவர்கள் அற்புதமான தத்துவார்த்தம் செய்து விளக்கியுள்ளார். உடம்பாகிய இரும்புக் கொப்பறையை வாதம், பித்தம், சிலேற்பனம் என்னும் மூன்று கால்களையுடைய அடுப்பில் ஏற்றி வைத்து சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்றம் என்ற பஞ்சபுலன்களின் உணர்வைத் தருவதாகிய தண்ணீரைக் கொப்பறையில் நிரப்பி அதனுள்ளே ஜீவாத்மா என்ற ஆமையைவிட்டு, கொப்பறையின் மேலே பந்தபாசங்கள் என்ற தட்டை வைத்துமூடி அகங்காரமாகிய பாறாங்கல்லை அதன் மேல் வைத்து தீவினைகளாகிய மரக்கட்டைகளை அடுப்பிலிட்டு தீமூட்டும் அப்போது கொப்பறைத் தண்ணீரில் நீந்தி விளையாடிய ஆமை கொதிநீரில் அவிந்து மாண்டு போவது போன்ற வாழ்க்கையிலிருந்து மக்கள் விடுதலையடைந்து ஆன்மீக நெறியைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் பேரின்ப சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற இறைவழி பாட்டு நெறியை விளக்கிக் கூறியுள்ளார்.

தத்துவப் பேராசிரியராய் விளங்கிய வாரியார் சுவாமிகள் என்ற ஞானக் கடலின் அலைகள் அடங்கி ஓய்ந்து விட்டன. அமைதியடைந்த ஞானக்கடலாகிய வாரியார் வழங்கிய ஞானமிர்தத்தை மாந்தி மக்களெல்லாம் நற்பேறு பெற்று வாழ்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருக கிருபானந்தவாரியாரின் நினைவுப் பேருரை

# வாழி கிருபானந்தவாரி புகழ்

வயிற்றுக்குள் வாழ்வளித்து
வையத்தில் இறக்கிக் கலை
பயிற்றி யிந்தப் பாரினிலே
பண்பாக வளர்த்து விட்டு
உயிர் நீத்துச் சென்ற வென்றன்
ஒப்பரிய பெற்றோருக்கு
தலைசாய்த்து தமிழ் வாழ்த்தத்
தாள் பணிர்ந்து கவிதை சொல்வேன்.

வேழ முகன் தம்பி வேலவனே தஞ்சமென்று
ஆழக் கருத்துக்களை அழகாக வீசி நெறி
ஆறாம் வாரியார்தம் அஞ்சலி விழாவதற்கு
சூழ வந்திருக்கும் பெரியீரே பணிகின்றேன்.

தலைவர் அவர்களே! தம்பியரே தங்கையரே!
நிலையிற் பிறழாத நல்லதமிழ் அறிஞர்களே!
விலை காணாக் கருத்துக்களை விதைந்த சொற்
கொண்டல்களே!
தலைசாய்த்துத் தமிழாலே தம்தேனென் வணக்கங்கள்

தமிழ் வளர்த்த நெடுங்குன்றம்
தலைசாய்ந்து போனதையா
சிமிழ் உருத்துத் தெய்வீகம்
சிறுவன் நிழல் சேர்ந்ததையா
அமிழ்தான தமிழ்ப் பேச்சு
அரனடியை இணைந்ததையா
கமழ்வாச மலர் உதடு
கடமை செய்து ஓய்ந்ததையா

அன்பர்களே.....! அழைத்த குரல்
அமைதிகடைப் பிடிக்குதையா
என்புருக தமிழ் உதிர்த்த
எழில்நாவும் உறங்குதையா
இன்ப அன்பு எங்கும் வேண்டும்
என்ற சிந்தை உறைந்ததையா
தென்றலெனப் பவனிவந்த
திருவுடலம், அமர்ந்ததையா!

★ குருக்கள் பரம்பரைக்கு மட்டும் ஆசௌச நாட்கள் குறைவாக இருப்பது ஏன்? ஏனையவர்களைப் போல் 31 நாட்களாக வரையறை செய்யாதது ஏன்? ஆகமங்கள் அவ்வாறு கூறுவதால் அவ்வாறு வரையறை செய்யப்பட்டுள்ளது.

★ தோப்புக் கரணம் பெண்கள் செய்யக்கூடாது என்கிறார்களே அதற்கு தாங்கள் கூறும் பதிலென்ன? தேகக் கூறுகளையும் மனக் கூறுகளையும் காவலாக கொண்டு வழிபாடு செய்யும் பெண்கள் மக்கட் பண்பாட்டின் நலம் காக்கும் நோக்கோடு பெண்கள் தோப்புக் கரணம் செய்வதை அனுபவ ரீதியாக சான்றோர்கள் விளக்கி வைத்திருக்கிறார்கள்.

★ சமய தீட்சை என்றால் என்ன? சமயப் பிரவேசம் செய்வதற்கு ஆச்சாரிய அபிஷேகம் பெற்ற குரு ஒருவரிடம் இருந்து முதலில் பெறும் தீட்சை.

★ சமயதீட்சை பெறாது சைவசமய ஒழுக்க நெறியை கடைப் பிடிக்காத ஒருவர் இறந்த பின் அவருக்கு மரணக் கிரியை செய்வது சரியா? சமய தீட்சை பெறாமலும் சைவசமய ஒழுக்க நெறியில் வாழாமலும் இறந்த ஒருவருடைய ஆன்மாவை அந்த ஒழுக்க நெறியில் வாழ்ந்தவராக பாவனை செய்து அபரக்கிரியைகளை நிகழ்த்தலாம்.

★ ஒருவருக்கு சமய தீட்சை அளிப்பதற்கு பிரமண குருமார் மறுப்பது ஏன்? ஆச்சாரிய அபிஷேகம் பெற்ற எவரும் சமயதீட்சை அளிப்பதற்கு தகுதி உடையவர்கள். பிராமணக் குருக்கள்மார் இதற்கு விதி விலக்கல்ல. தீட்சை பெறுபவர் அதைப் பெறுவதற்கு தகுதி உடையவராய் இருக்க வேண்டும்.

★ ஆடி மாதம் வீடு கட்டுதல் திருமணம் செய்தல் போன்ற சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்ட ஒரு மாதம். அப்படி இருக்கும் போது எமது ஊரின் ஒரு ஆலயத்தில் சென்ற ஆடி மாதம் மணிக்கூட்டு கோபுரத்துக்கும், மடைப் பள்ளிக்கும் அத்திவாரம் இட்டுள்ளனர். இது சரியா? நலம் கேடு இரண்டும் ஒருவருடைய நம்பிக்கையின் யதார்த்த நிலையில் நிகழ்வன. மங்கள காரியங்களைச் செய்வதற்கு விலக்கப்பட்ட மாதம், நாள், நட்சத்திரம், திதி என்பவற்றில் ஸ்திரமான நம்பிக்கை உடையவர்கள் மங்கள காரியங்களை விலக்கிக் கொள்வது உத்தமம்.

★ ஆலயத்துக்கு வரும் அடியார்கள் சண்டேசுவரர் சந்நிதியில் தங்கள் உடையில் உள்ள நூலை எடுத்து போடுகிறார்கள். இத் தவறான காரியத்தை ஏன் செய்கின்றனர் மனிதனாய் பிறந்து தேவனாய் உயர்ந்த மூர்த்தி சண்டேசுவரர் மனிதன் தன்னை உயர்த்திக் கொள்வதற்கு அன்னதானம் முதலிய தானங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்றாகிய வஸ்திர தானத்தை மக்களுக்கு செய்ய வேண்டும். செய்து உத்தமனாக்கிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பினால் வஸ்திர தானம் செய்ய வேண்டும் என்பதை நினைவு படுத்தி இவ்வாறு செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வயது முதல்
பைந்தமிழாம் மழை பெய்தோன்
தன்னீரண்டு விழிகளெனத்
தமிழ் சைவம் தனைக் காத்தோன்
பன்னிருகை வேலன் புகழ்
பாரெங்கும் பரப்பிநின்றோன்
தன்னினிய வாழ்வுதனைத்
தமிழுக்காய் அர்ப்பணித்தோன்

''இம்'' பெனுமுன் தமிழ் வந்து
ஏவல் செய்த திரு நாவோன்
சம்மன மிட் டுட்கார்ந்து
சங்கந்தனை அழைப்பித்தோன்
எம்மதமும் ''எம்'' மதமே
என்றுரைக்குச் ஞானவாரி
தம்மனதைத் தூயதாக்கித்
தரணியிலே வாழ்ந்த யோகி

மழித்திடல் நீட்டல் வேண்டாம்
மாபெரும் ஞானி அவர்
பழிந்திடும் செயல்கள் நீங்கப்
பண்புடன் உரை வீரர்; புவி
விழித்திட வேண்டும் என்று
விளக்கியே வந்த தீரர்
தெளி நீ ரோடை யன்ன
தீந்தமிழ் பொழியும் வாரி

தமிழோடு தருமந்தன்னை தலைநிமிர வைத்தமகன்
அழகாகத் தமிழ்பேச அகிலத்தோர்க் குரைத்த் குரு
விலகாத வகை நெஞ்சில் விளக்கங்களை விதைத்த உழவன்
உலகோடு ஒட்டி நின்று உலகையுவித்த விழவன்

குலுங்கும் தமிழ்ச்சிரிப்பில் குவலயமே பணிந்து நிற்கும்
மலங்கள் எமை விட்டகல மாண்புறுநற் கருத்து வரும்
விழுங்கி அலர் செய்யுமுரை வேகத்தடை யாகி நிற்கும்
எழுந்து அவர் சென்றபின்னும் இனியதமிழ் செவியை அள்ளும்

குமிழ்ச் சிரிப்பும் குறுகுறுக்கும் விழிகளும்
அமிழ்தான தமிழ்ப்பேச்சும் ஆழக் கருத்துக்களும்
உமையாள் மகன் குமரன்பேர் உச்சரிக்கும் உதடுகளும்
எமைவிட்டுப் போயினவோ எட்டாமல் மறைந் தனவோ.

நெஞ்சம் குமுறியழ
நினைவெல்லாம் சோர்ந்து நிற்க
வெஞ்சினத்தை விதிமேலே
விணணென்று பாயவிட
அஞ்சாத மனம்கூட
அல்லலுற்று அமைதிபட
துஞ்சினரோ கோமானெமைத்
துயரிலிட்டு மறைந்தனரோ!

எங்கே ஐயா மறைந்தார் அவர்
எம்முள்தான் நிற்கின்றார்
பொங்குகின்ற தமிழ்ச் சொல்லாய்ப்
புகுந்து விளை யாடுகின்றார்
திங்களினும் பாரிதியினும்
திகழ்கின்ற செழுஞ்சுடராய்
எங்களுக்கு வழிகாட்டி
எமக்காக நிற்கின்றார்.

வாரிமறை யவில்லைதமிழ்
வார்த்தை வளம் இழக்கவில்லை
நாரும்பூ மணம் பெறல்போல்
நல்லதமிழ் அறிஞர் மனத்
தேரின் சாரதியாய்
தெய்வமென வந்து யிர்த்து
வாரி வழங்குவதால்
வாரியார் மறையவில்லை!

நெஞ்சமே நிமிர்ந்து நில் நேரியபாதையில் கால்
அஞ்சாமல் வைத்துப்பார் அருள் முருக வாரியாரின்
நெஞ்சம் உனைப்போற்றும் நீணிலமும் பெருமை யுறும்
வஞ்சகமே அறிந்த வாழ்க்கைநல் வளம்பெருக்கும்

வாரியார் கருத்துக்கள் வாழ்க்கைத்தன்னைச் செப்பனிடும்
காரிருளிர் கைவிளக்காம் காலமெனக் கூடவரும்
நேரிய பாதை காட்டி நிம்மதியை வாழ்வில் கூட்டும்
சீரியராக்கி இங்கே சிறப்புற ஏற்றிவைக்கும்.

அன்னவர் பணிகள்வாழி! அகிலமுள் ளளவும் வாழி!
தென்னவன் தமிழ்போல் வாழி! திருசைவ நெறியாய் வாழி,
புன்னகை மன்னன்எங்கள் கிருபானந்த வாரி வாழி!
அன்னவர் வழியிற்சென்று அகிலமே சிறந்து வாழி!


— கந்தவனம் ,கோணேஸ்வரன்
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலையில் இடம்பெற்ற அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் சுவாமிகளின் நினைவஞ்சலிக் கூட்ட நிகழ்வுகள்

இடம் - தி/இ. கி. ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி திருக்கோணமலை. காலம் - 19-12-1993

இந்நிகழ்வினை திருக்கோணமலைமாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சமயக்குழுவும் சைவ ஆலயங்ககளின் தர்மகர்த்தாக்களும் இந்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து நடாத்தப்பட்டது.



திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் திருவுருவப்படம்



திருக்கோணமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு. நா. புவனேந்திரன் அவர்கள் தலைமை உரை ஆற்றுகின்றார்




அருள்மிகு மாரியம்மன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கணேசஷண்முகதாசக் குருக்கள் அவர்கள் நினைவு உரை ஆற்றுகிறார்

## திருக்கோணமலையில் இடம்பெற்ற அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் சுவாமிகளின் நினைவஞ்சலிக் கூட்ட நிகழ்வுகள்

**இடம் - தி/இ. கி. ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி திருக்கோணமலை. காலம் - 19-12-1993**


இந்நிகழ்வினை திருக்கோணமலைமாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சமயக்குழுவும் சைவ ஆலயங்ககளின் தர்மகர்த்தாக்களும் இந்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து நடாத்தப்பட்டது.



ஞானசிரோன்மணி பண்டிதர் திரு.இ.வடிவேல் அவர்கள் உரையாற்றுகின்ற காட்சி



கவிஞர் தாமரைத்தீவான் அவர்கள் கவிதாஞ்சலி படிக்கின்றார்



நினைவஞ்சலிக்கூட்டத்திற்கு சமூகமளித்தோரைக் காண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம யாத்திரை

— செல்வி க. லோகேஸ்வரி ஆண்டு 12 ஆதிகோணைநாயகர் மகாவித்தியாலயம், தம்பலகாமம். —

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை இலவச தலயாத்திரை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். அதனோடு எமது பாடசாலையில் ஒன்பது மாணவிகளும், ஆறு மாணவர்களுமாக மொத்தத்தில் பதினைந்து மாணவ மாணவிகளும் கலந்து கொண்டோம். எங்களுடன் இரு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள், பேரவையின் அலுவலகப் பணியாளர்கள், பேரவையின் தொண்டர்கள்' இம்மாவட்டத்தின் ஒரு சில பாடசாலை மாணவர்களும் சேர்ந்து சென்றோம். 31-07-93 சனியன்று ஆரம்பமாகிய எமது பயணம் 03-08-93 செவ்வாயன்று முடிவடைந்தது.

31-07-93 சனிக்கிழமை காலை எட்டு முப்பது மணிக்கு எமது யாத்திரைக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேருந்து திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைப் பணிமனை வாயிலை வந்தடைந்தது. எங்களது பொருட்கள் அடங்கிய பைகளை பேருந்தில் அழகாக அடுக்கி வைத்தார்கள். திருமுறை ஓதலுடன் அரோகரா என்ற ஒலியுடனும் திருக்கோணமலையில் இருந்து எங்களது பேருந்து பயணத்தை மேற்கொண்டது எங்களது உள்ளங்களில் உவகை பொங்கி எழுந்தன. பயணம் சென்றவர்களில் சிலர் திருமுறை ஓதினர். அதைக் கேட்டதும் எமது பக்தி மிகவும் கூடிக் கொண்டது. அதற்கிடையில் மதிய பொழுது வந்து சேர்ந்தது. திம்புறாகம என்னும் இடத்தில் பாதை ஓரங்களில் வைத்து எமது மதிய போசனத்தை புசித்து விட்டு எமது பயணத்தை மீண்டும் தொடர்ந்தோம். இரு மருங்கிலும் எமது பார்வையைச் செலுத்தினோம். இயற்கைக் காட்சிகள் எங்கும் நிறைந்திருந்தன. இக்காட்சிகளை மிகவும் சந்தோஷமாகக் கண்டு கழித்தோம். அதற்கிடையில் மாலைப் பொழுது நெருங்கிக் கொண்டது. எங்களது பேருந்து மிகவும் உற்சாகத்தோடும், விரைவாகவும் சென்று கொண்டிருந்தது. பாதையின் இரு மருங்கிலும் மலைத்தொடர்கள் பாறைகள் பாறைகளின் மேல் மரஞ்செடிகள் இப்படியாக காணப்பட்டன எமது பேருந்து மிகவும் நிதானத்தோடு சென்றது. பாதை ஓரங்களில் ஆங்காங்கே மின்சார விளக்குகள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. நாங்கள் கதிர்காமத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம் என ஒரு பெரியவர் கூறினார். ஆம், கதிர்காமம் வந்து விட்டோம், என்றதும் எமது உள்ளங்களில் ஆனந்தம் பொங்கியது. அங்கு கடைத் தெருக்கள் நிறைந்து காணப்பட்டன. மின் விளக்குகள் வகை வகையான வர்ணங்களில் எங்களை வருக! வருக! என வரவேற்பது போலத் தென்பட்டது. கடைகளில் வகை வகையான பொருட்கள் தொங்கிக் காணப்பட்டன. அதோ தெரியும் மலைதான் கதிரமலை என்றதும் எமது உள்ளங்கள் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்தன. கந்தனை வேண்டி பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினோம். ஒன்பது முப்பது மணியளவில் கதிர்காமத்தில் உள்ள ஒரு வீட்டை சென்றடைந்தோம். அன்று இராப் பொழுதை அங்கேயே கழித்தோம்.

அன்றைய இராப்பொழுது எங்களுக்காகவே வெகு விரைவாக கழிந்தது போல் அமைந்தது. 01-08-93 வைகறைப் பொழுதிலே எல்லோரும் எழுந்து விட்டார்கள். திரு. சிவபாதசுந்தரம் ஐயா அவர்கள் எல்லோரும் ''மாணிக்ககங்கைக்கு செல்லத் தயாராகுங்கள்'' என கூறினார். தாமதம் இல்லாமல் எல்லோரும் தயாராகி விட்டார்கள். எமது பேருந்து மாணிக்க கங்கையை நோக்கி புறப்பட்டது. புறப்பட்ட பேருந்து நாங்கள் தங்கியிருந்த இடத்தை விட்டு இன்னோர் தங்குமிடம் நாடிச் சென்று அங்கு நிறுத்திவிட்டு எல்லோருமாக நிராடச் சென்றோம். அங்கு மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. தீர்த்தக் கரையில் சிலர் நீராடிவிட்டு வெளியில் வருகின்றனர். இன்னும் சிலர் நீராடுகின்றனர். இன்னும் சிலர் நீராடுவதற்காகச் செல்கின்றனர். ஆம் பெரியவர்கள் கூறுவது எனது நினைவிற்கு வந்தது. மாணிக்ககங்கையில் நீராடினால் பாவங்கள் நீங்கும் என்பார்கள். அது உண்மையாகத்தான் இருக்கும். பல்லாயிரக்கணக்கான மக்கள் தாங்கள் செய்த பாவங்களை களைகின்றனர். நாங்கள் நீராடி விட்டு எமது தங்குமிடத்துக்குச் சென்றோம். சென்ற நாங்கள் விரைவாகவே புத்தாடைகள் அணிந்து கொண்டு கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டோம். கதிர்காமத்து கோயிலை சென்றடைந்தோம். கோயிலில் பக்த கூட்டங்கள் நிறைந்து காணப்பட்டன. சிலர் காவடி எடுத்தனர். சிலர் கற்பூரச் சட்டி என பல நேர்த்திக் கடன்கள் செய்தனர். அங்கு இந்து கோயில் மட்டுமல்லாது புத்த ஆலயமும், முஸ்லிம்களது பள்ளிவாசலும் காணப்பட்டது. எல்லா மத மக்களுமே அங்கு வந்திருந்தனர். அங்கு பிள்ளையார் கோயில் இருக்கின்றது. அதனை வலம் வந்து தரிசித்து விட்டு காணிக்கை போட்டோம். அங்கு கப்புறாளை தான் பூசை செய்வார். அவர் இறைவனை மந்திரங்களால் பூசித்து விட்டு விபூதியை வெற்றிலையில் வைத்து தந்தார். கோயிலில் இருந்து நாங்கள் விடுதியை அடைந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதியை அடைந்த நாங்கள் பேருந்தில் செல்லக் கதிர்காமம் சென்றோம். அங்கும் இறைவனை தரிசித்து விட்டு மாணிக்ககங்கை கரையோரமாக இருந்து பொங்கல் செய்வதற்கான சில வேலைகளை செய்து முடிக்க பெரியவர்கள் பொங்கல் பொங்குவதில் ஈடுபட்டனர். எங்கு திரும்பினாலும் அங்கு அடுப்பு வைத்து பொங்கல் செய்யும் காட்சியே காணப்பட்டது. ஒருவர் மற்றவருடன் கதைப்பது என்றால் சுவாமி என்றே கதைக்கும் வழக்கம் இருந்தது. பெரியவர்களோடு தொடர்பு கொள்ளும் போது பெரியசுவாமி சிறியவரோடு தொடர்பு கொள்ளும் போது சின்னச்சுவாமி என்றும் அழைப்பதும் வழக்கமாக காணப்படுகிறது. இதனை கேட்கும் போது சிறுவயதில் படித்தது நினைவுக்கு வந்தது. கதிர்காமத்தில் சுவாமி என்று கதைக்கும் வழக்கமும் அங்கு கப்புறாளை வாய் கட்டி பூசை செய்வது என்பவையே அவையாகும். எங்களது பொங்கலும் முடிந்தது பொங்கலை படைத்து திருமுறை ஓதி பூசித்து விட்டு எங்களுக்கு அருகாமையில் உள்ளவர்களுக்கும் கொடுத்து நாங்களும் கந்தனது பொங்கலை சாப்பிட்ட பின்னர் எமது பேருந்து நாங்கள் தங்கி இருந்த இடம் நோக்கி நகர்ந்தது. அங்கு சென்ற எங்களுக்கு மதிய போசனம் இருந்தது. மதிய போசனத்தை சாப்பிட்டு விட்டு அங்குள்ள மரநிழல்களில் இருந்து மதிய பொழுதை கழித்தோம். பொழுது சாயும் நேரத்தில் கடைத்தெருவிற்குச் சென்றோம். கதிர்காமத்திற்கு சென்று வந்தால் எல்லோருக்கும் விபூதியும், தேனும், தினை மாவும், தீர்த்தமும் கொடுப்பது வழக்கம். சிவ சின்னங்களில் ஒன்றாகிய கந்தனது திருநீற்றை கோத்துக் கணக்கில் வாங்கிக் கொண்டோம் சாமிப் படங்களும், இன்னும் பல பொருட்களையும் வாங்கிக் கொண்டு சென்றோம். ஞாயிற்றுக்கிழமையன்று இராப்போசனத்தை புசித்து விட்டு அன்றைய இராப்பொழுதை கழித்தோம். இந்த இராப்பொழுதை என்னால் மறக்க முடியாது. ஏனெனில் அடுத்த நாளான 02-08-93 திங்களன்று கதிரமலை ஏறும்படலம் நினைவெல்லாம் கனவாக கதிரமலையை கனாக் கண்டேன்.

திங்கட்கிழமை விடியற் காலையில் எல்லோர் மனதிலும் சந்தோஷம் பொங்க மாணிக்க கங்கையில் நீராடி விட்டு திருமுறை ஓதலுடன் எங்களது பேருந்து கதிரமலையை நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தது. எங்களது உள்ளங்களில் ஒரே ஆனந்தம் கதிரமலையைக் காணச் செல்கின்றோம் என்ற அவா. ஆம் கதிரமலையை அண்மித்து விட்டது எங்களது பேருந்து. எல்லோரும் பக்திப் பரவசத்துடன் இறங்கி தேங்காய், கற்பூரம் போன்ற பொருட்களை வாங்கிக் கொண்டு கதிரமலையில் ஏறத் தொடங்கினோம். சோமசுந்தரப் புலவர் கூறியது போன்று ''கதிர மலை காணாத கண்ணென்ன கண்ணோ அதன் கற்பூர ஒளி காணாத கண்ணென்ன கண்ணோ''. ஆம் எமது கண்கள் காணச் செல்கின்றன. முதலில் விநாயகரை தரிசித்து விட்டு தேங்காய் உடைத்து எமது பயணத்தை தொடர்ந்தோம். பல கோடிக் கணக்கான மக்கள் ஏறுகின்றனர். பல கோடிக்கணக்கான பக்தர்கள் இறங்குகின்றனர். ''அரோகரா'' என்ற ஒலியே வானளாவி ஒலித்துக் கொண்டிருந்தது. ஒருபால் ஏறிக் கொண்டிருந்தோம். மறுபால் இறங்கிக் கொண்டிருந்தனர். சிறுவர் முதல் முதியவர் வரை இதில் கலந்து கொண்டனர். நாங்களும் ஏறிக் கொண்டிருந்தோம். ''கந்தனுக்கு அரோகரா'' ''முருகனுக்கு அரோகரா'' ஏழுமலை வேலனுக்கு அரோகரா'' என்ற ஒலியும் இன்னும் பல முருக நாமங்களை கூறி அரோகரா போட்டனர். நாங்களும் முருகனது நாமங்களை கூறி அரோகர என்றோம். எமது ஐம்பொறிகளுடன் கூடிய புலன்கள் முருகனையே நினைத்தன. எமது உள்ளங்களில் எந்த எண்ணமும் இல்லாது முருகனின் நினைவாகவே இருந்தது. ஒருவாறாக கதிரமலை ஏறி முடித்தோம். முதலில் விநாயகரை வணங்கி விட்டு முருகனிடம் சென்றோம் அங்கு கப்பூறாளை மஞ்சள் துணியால் வாய்கட்டி பூசை செய்தார். பூசை கண்டு பிரசாதம் வேண்டிக் கொண்டு நாங்கள் முருகனின் நாமங்களைப் பாடிய வண்ணம் மலையில் இருந்து இறங்கினோம். இறங்கிய பின்பும் எம்மை அறியாமல் முருகனின் நாமங்களையே உச்சரிக்கலானோம்.

எமது பேருந்தில் ஏறும்போதும் முருகனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டோம். பேருந்து எமது தங்குமிடம் நோக்கிச் சென்றது. அங்கு மதிய போசனத்தை முடித்த பின் கபரணையை நோக்கிப் புறப்பட்டோம். இரவு பத்து மணியளவில் கபரணை புத்த விகாரையை வந்தடைந்தோம். அன்றைய இராப் பொழுதை அங்கேயே போக்கினோம்.

அதிகாலை பேருந்தில் சிகிரியாவை நோக்கிச் சென்றோம். பேருந்து நிறுத்தும் இடத்திலே பேருந்தை நிறுத்தி விட்டு மலை ஏறும் படலத்தை ஆரம்பிப்பதற்காகச் சென்றோம். மலையில் ஏறி பலவிதமான புதுமைகளையும் கண்டு களித்தோம். இவற்றில் உலகப் புகழ் மிக்க சிகிரிய குன்று வண்ண ஓவியங்கள் எம்மை வெகுவாகக் கவர்ந்தன. அந்த பசுமையான நினைவுகளோடு சிகிரியாப் பயணத்தை முடித்த அதே நினைவுகளோடு தம்புள்ளை பௌத்த ஆலயத்தை நோக்கி எமது பயணம் ஆரம்பமானது. அங்கு புத்த பெருமானுடைய திருவுருவங்கள் பலபல வடிவங்களிலும் அமைந்திருக்கக் கண்டோம். அற்புதமான வண்ண ஓவியங்கள் அங்கும் எம்மைக் கவர்ந்தன. இலங்கையில் வரலாற்றுப் புகழ் மிக்க இடங்களாகிய சிகிரிய குன்றையும் தம்புல்ல குகையையும் கண்டு கழித்த நாம் எமது சுற்றுப்பிரயாணம் இந்து பௌத்த தலங்களை தரிசிக்கும் யாத்திரையாக அமைந்ததை இட்டு பெருமைப் பட்டுக் கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னூஞ்சல்

சிவாலயங்களில் உற்சவங்கள் முடிந்த காலத்தும் ஏனைய விழாக்காலங்களிலும் பொன்னூஞ்சல் இடம் பெறுவதை நாம் அறிவோம். பொன்னூஞ்சல் ஆடுவது தொன்மையான வழக்கமாகும். அன்பு வள்ளல், அன்புப் பிழம்பு எனத் திகழும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திலே பொன்னூஞ்சல் பாட்டு பாடி தந்துள்ளார். இப் பாடல்கள் மூலம் பொன்னூஞ்சல் ஆடுவது பழமையாகும் என்பதை அறிய முடிகிறது.

பிரணவ பலகையைக் குறிக்கும் பொன்னாலான பொன்மயமான அழகிய பலகையில் மூர்த்தியை இருத்திப் பாடி ஆடுவதனால் பொன்னூஞ்சல் எனப் பெயர் ஆயிற்று. பக்குவமடைந்த ஆன்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்கும் நிகழ்ச்சியே பொன்னூஞ்சல் நமக்குத் தரும் உண்மையாகும். இதனைச் சாலன தந்திரம் எனச் சித்தாந்தக்காரர் கூறுவர். அருட் சத்தி என மாணிக்கவாசக சுவாமிகள் வகுத்துக் காட்டுகிறார். இரண்டறக் கலக்கும் கால் நிகழும் அசைவே ஊஞ்சலாட்டமாகும்.

மகோற்சவ காலங்களில் நடைபெறும் கொடியேற்றம் படைத்தலையும், வாகனோற்சவம் காத்தலையும், ரதோற்சவம் அழித்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் பொன்னூஞ்சல் அருளைப்பெற்ற ஆன்மா இறைவனுடன் கலந்து உவகை அடைதலையும் வெளிக்காட்டுவனவாகும்.

பொன்னூஞ்சல் ஆடுங்கால் சிறப்புரிமை பெற்றோர் ஊஞ்சற்கண் இருக்க காள அறுதியிடுவோரும் ஏனையோரும் கீழிருந்து அவ்வூஞ்சலைப் பாடி ஊக்குவிப்பர்.

''வடங்கொள் மணியூசல் மேலிரீஇ ஐயையுடங்
கொருவர் கை—நிமித்தாங்கு
ஒற்றை மேலூக்க'' என்பது சிலப்பதிகாரம்.

பொன்னூஞ்சல்ப் பாட்டுக்கள் பெரும்பாலும் பதின்மூன்று பாட்டுக்களைத் தாண்டமாட்டா. மாணிக்கவாசக சுவாமிகள் ஊஞ்சல்ப்பாட்டு ஒன்பது மட்டுமே ஒருசில சந்தர்ப்பத்தில் ஒன்று இரண்டு பாட்டுகள் மிகைப்படுவதுமுண்டு.

பொன்னூஞ்சல் பாக்கள் இருபிரிவுகளாக அமையும். ஒன்று மூர்த்தியின் பொதுத் திறனைப் பற்றியும் மற்றது அருளைப் பெற்றவனுடைய திறனைப் பற்றியதாகவும் அமைவன. முதல் பிரிவிலே மூர்த்தியினுடைய குணம் பரவி ஊசலாடுவது, மூர்த்தியின் தூய புகழ் பாடுவது, மூர்த்தி தங்குமிடம் பற்றி பாடியாடுவதும், இரண்டாம் பிரிவில் நம்மையாட்கொள்பவனைப் பாடி ஆடுதல், இறைவன் தங்கும் இடம், ஆலயம் பற்றி பாடியாடுதல், நம்மை ஆண்டு கொள்ளும் மூர்த்தியின் குண்டலங்களையும் அணிகலங்களைப் பற்றியாடுதல். நம்மையாண்டு கொள்ளும் மூர்த்தியின் எழில் பாடியாடுதல் எம் பிறப்பற பணிகொள்ளும் இறைவன் குணம் பராவியாடுதல், நமக்கு அருள் தரும் மூர்த்தியின் திருவடிகளைப் பாடியாடுதல் என்பனவும் இடம்பெறும். அல்லாமல் மூர்த்தியின் அவதார விளக்கங்களோ திருவிளையாடல்களோ இடம்பெற மாட்டாது. பொன்னூஞ்சல் பாக்கள் அனேகமுள. அவைகளை ஆராய்ந்தால் இவை தெளிவாகும். இவைகளை நன்கு அறியாத அன்பர்கள் தங்கள் மனம்போன போக்கிலே பொன்னூஞ்சல் பாக்களைப் பாடி ஆலயங்களில் படிக்கின்றார்கள். இவர்கள் பாக்கள் யாப்பிலக்கணத்தை மீறியதாகவும் அமைகிறது இவர்களின் இச்செய்கை தூய சைவ சித்தாந்த தத்துவங்களை மாசுபடுத்துவதாக அமைகிறது. சிவாச்சாரியார்களும் சமயாசாரிகளும் ஆலய நிர்வாகிகளும் பெரியோர்களும் ஏனையோரும் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவார்களாக. பாக்கள் கொச்சகக் கலிப்பாவாக யாப்புப் பெற்றிருப்பதையும் நாம் காண முடியும்.

பிரணவ மலையில் மனதையும், பார்வையையும் வைத்துச் சாலனம் என்னும் தந்திரத்தைச் செய்தால் ஈசான திசையில் சிவன் தோன்றி ஆனந்தத்தைக் கொடுப்பான் என்பதே பொன்னூஞ்சலாகும்.

''உலகமெல்லாம் சிவநெறி ஒளி பரவ
இறைவன் அருள் புரிவானாக''.

க. இராசரெத்தினம்
ஆரையம்பதி

---

இதைத் தொடர்ந்து எமது பயணம் எங்கள் திருநகராம் திருகோணமலையை நோக்கிப் புறப்பட்டது சுற்றுலாவின் போது நாம் அனுபவித்த அனுபவங்களை எங்களுக்குள் பகிர்ந்து மகிழ்ந்தோம். எமது சொந்த இடங்களை வந்து அடையப் போகின்றோம் என்ற மகிழ்வுடனும் எமது உற்றார் உறவினர்களை கண்டு அளவளாவப் போகின்றோம் என்ற குதூகலத்துடனும் இருந்தோம் சந்தோஷ மிகுதியால் எல்லோருமே ஆடிப்பாடி மகிழ்ந்த வண்ணம் பிரயாணத்தை மேற்கொண்டோம். இந்நிகழ்வு கந்தளாய் வரையும் அமைந்திருந்தது.

தம்பலகாமம் சந்தியில் நாங்களும் பேருந்தில் இருந்து இறங்கிக் கொண்டோம். அவ்வேளையில் இவ்வருமையான சுற்றுலாவை ஏற்படுத்தித் தந்த திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினருக்கும் எமது அருமை நண்பர்களுக்கும் பிரியாவிடை கூறிக் கொண்டோம். இவ்வரிய சுற்றுலாவை ஏற்படுத்தித் தந்த இவ் அமைப்பினருக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்த வண்ணமே எமது இல்லங்களைச் சென்றடைந்தோம்.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கும் அதன் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களுக்கும் எமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''நன்றி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிவோம் திருப்பாதம்

ஊற்றெடுக்கும் மாவலியின்
உய்வினாற் பெருவெளியும்
ஏற்றமுறக் கழனியெலாம்
எழிலாக அருள் வளங்கும்
தேற்றா மரத்தடி யானை
தேனொழுகு தீந்தமிழால்
போற்றிப் பணிவோமவர்
பொன்னார் திருப்பாதம்

சந்ததமும் இந்து மதச்
சரித்திரத்தை நாம் பயில
ஐந்தெழுத்து மந்திரத்தின்
ஆகமங்கள் தனைப்புரிய
சிந்தையிலே சைவ மதம்
சீர் தூக்க வென்னாளும்
இந்து இளைஞர் மன்றம்
இளமை பெற அருள் தருவாய்

மனுக்குலம் தழைக்க மண்ணில்
மலர்ச்சியும் பிறக்க வெங்கள்
மனக்குறை தீர்க்க நல்ல
மாசில்லாக் கருணை பொங்க
இனம் மதம் என்னும் பேதம்
இல்லா தொழிந்து போக
வணங்குவோம் கணபதி பாதம்
வருங்குறை தீர்கவென்றே

ஐவகை நிலத்தின் கண்ணே
அறநெறி தோன்ற நாளும்
தெய்வமே துணையாய் ஆக
தேன் மழை பொழிய வென்றும்
பொய்மையே புனைந்து போக
புத்துயர்வு பிறக்க மண்ணில்
செய் தொழில் சிறப்புற்றோங்க
செல்வமே செழிக்கும் பாரீர்.

அறிவெனும் பூம் பொழில்
ஆக்கிடத் தமிழ் வழி
நெறிமுறை உணர்ந்துயர்
நேர்மையாய் பண்புடன்
வழி வழி வந்த சீர்
வரம்பினை மீறிடா
நலம் பெற வேண்டி நாம்
நாடுவோம் வணக்கத்தை

இறப்பதொன்று றுதி ஐயா மேலும்
பிறப்ப தெவ்வாறு? சிவ நெறியை
மறப்பதால் மனிதன் மீண்டும்
மலர் வானா மண்ணின் மேலே!

அறம் பொருள் இன்பந் தன்னை
ஆக்கி யெமக் குயிரீந்து
தேற்றும் கதிரேசப் பிள்ளையாரே
போற்றினேன் நின் பொன்னார் திருப்பதமே.

இறால்குழி: சிவகுருநாதன்

---

இயற்கை முழுவதும் இரவில் உறக்கங் கொள்கிறது. எல்லோரும் தூங்கும்போது அரக்கர்தான் இரவில் கண்விழித்திருப்பார்கள். மனிதருலகில் உள்ளவருக்குத் தூக்கம் தேவையானதாகும். தூங்காமலிருப்பது ஒரு பழக்கமாகிவிட்டது. இது ரஜோ குணமும், தமோ குணமும் கலந்ததொரு நிலையாகும். இதனைச் சிறிது சிறிதாகத் தவிர்க்க வேண்டும். இரவில் கண்விழித்துப் படித்துக் காலையில் தூங்குபவன், படித்ததை மறந்து விடுகிறான். படிக்க வேண்டுமானால். காலையில் 3-00மணிக்கு எழுந்திருந்து படிக்க வேண்டும். ஒருமுறை கண்விழித்தபின், மறுபடி உறங்கச் செல்லலாகாது. இதுதான் உண்மையான சாத்விக முறையாகும்.

பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலந்தரும் நவங்கள்

**நவ நாகங்கள்**

| | | |
|---|---|---|
| 01. அனந்தன் | 02. ஆதிசேஷன் | 03. கார்க்கோடகன் |
| 04. குளிகன் | 05. சங்கபாலன் | 06. தஷன் |
| 07. பதுமன் | 08. மகாபதுமன் | 06. வாசுகி |

**நவரத்தினங்கள்**

| | | |
|---|---|---|
| 01. கோமேதகம் | 02. நீலம் | 03. பவளம் |
| 04. புஷ்பராகம் | 05. மரகதம் | 06. மாணிக்கம் |
| 07. முத்து | 08. வைரம் | 09. வைடூர்யம் |

**நவபுண்ணியங்கள்**

| | | |
|---|---|---|
| 01. அமுதம் ஏந்தல் | 02. அருச்சித்தல் | 03. ஆசனத்திருத்தல் |
| 04. எதிர்கொள்ளல் | 05. திருவடிதுலக்கல் | 06. தீபங்காட்டல் |
| 07. தூபங்காட்டல் | 08. பணிதல் | 09. புகழ்தல் |

**நவநிதிகள் குபேரனிடம் உள்ளவை**

| | | |
|---|---|---|
| 01. கச்சபநிதி | 02. கற்பநிதி | 03. சங்கநிதி |
| 04. பதுமநிதி | 05. நந்தநிதி | 06. நீலநிதி |
| 07. மவராநிதி | 08. மவராமதுமநிதி | 09. முகுந்தநிதி |

**நவ முகில்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஆவர்த்தம் | 02. சம்வர்த்தம் | 03. புஷ்கலம் |
| 04. துரோணம் | 05. காளம் | 06. நீலம் |
| 07. வாருணம் | 08. வாழிவம் | 09. தமம் |

**நவநாயகர்கள்**

| | | |
|---|---|---|
| 01. சூரியன் | 02. சந்திரன் | 03. செவ்வாய் |
| 04. புதன் | 05. வியாழன் | 06. வெள்ளி |
| 07. சனி | 08. இராகு | 09. கேது |

**நவசக்திகள்**

| | | |
|---|---|---|
| 01. சைலபுத்ரீ | 02. ப்ரவர்மசாரிணீ | 03. சக்திரகண்டா |
| 04. உஷ்மாண்டா | 05. ஸ்கந்தமாதா | 06. காத்யாயனி |
| 07. காலராத்ரீ | 08. மஹாகௌரீ | 09. வலித்திப்ரதா |

''இராஜேஸ்வரக் குருக்கள்''

---

இந்த உலகத்தில் காணும் அறிவெல்லாம் எங்கிருந்து வந்தது? அவை நம்மிடமே இருந்தது. எந்த அறிவு நமக்கு வெளியே இருக்கிறது? ஒன்றுமே இல்லை. அறிவு என்பது ஒருபோதும் சடப் பொருளில் இல்லை, மனிதனிடமே எப்போதும் இருந்து வந்தது. ஒருவரும் அறிவைப் படைப்பதில்லை. மனிதன் அதைத் தன்னுள்ளிருந்து வெளிக் கொணர்கிறான். அது அங்கேயே உள்ளது. கடுகில் எட்டில் ஒரு பங்கே உள்ள ஆலம் விதையில், ஏக்கர் கணக்கான பரப்பில் பரந்து நிற்கும் ஆலமரமே அடங்கியுள்ளது; எல்லா சக்தியும் அதனுள்ளே உள்ளது. மிகப் பெரிய அறிவாற்றல் உயிரணுவுள் அடங்கி இருக்கிறது, என்று நாம் ஏற்றுக்கொள்ளும்போது, எல்லையற்ற சக்தியும் நம்முள் அடங்கி இருக்கக் கூடாதா?

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாரிச் சொரிந்த அனுபூதிச் செல்வர்

திருமதி சித்திபத்மநாதன்

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், தமிழ்மொழி

வாரி பொழிந்தால் மண்செழிக்கும் தானம் தவம் இவை தரணியில் தங்கும்.

கிருபானந்தவாரி எனும் சொற்கொண்டல் நாப் பொழிந்தால் மனங்கள் செழிக்கும். தருமம் தழைக்கும், தமிழ் கொழிக்கும், சைவம் சிறப்புறும். பாரியின் கொடைத்திறனை வஞ்சகப் புகழ்ச்சியாகப் பாடும் பெருமை ஒன்றுண்டு. பாரி பாரி (என்கிறீர்களே! மாரி என்பதொன்றும் உண்டல்லவா?.........

ஆக கைமாறு கருதாத கடப்பாடுடைய மாரிக்கு - எம் கோமான் அன்பர்க்கு முன்னி ஆளுடையாள் முன்சுரக்கும் இன்னருள் போன்ற மாரிக்குப் பாரியின் வண்மை ஒப்பாகலாம்.

மாரிநிகர் சொற்பெருக்கால் எழுபது ஆண்டுகள் பக்திப் பயிர் வளர்த்துத் தமிழ் வளர்த்த வாரியார் தம்மறைவை அகில உலகமும் கேட்டு அதிர்ச்சியுற்றது பிரத்தியட்சம்.

கலைமாமணி, அருள்மொழி அரசு, இசைப் பேரறிஞர், திருப்புகழ் ஜோதி இன்னும் இந்திய சங்கீத நாடக அக்கடமியில் சிறந்த கலைஞர் விருது.

சங்கராச்சாரியார் வழங்கிய சரஸ்வதிகடாட்ச மிருதம் - என்ற உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் தங்கத் தாமரை விருது, காஞ்சி சந்திர சேகரேந்திர சுவாமிகளால் கொடைவள்ளல் - என்ற பட்டம்.

இத்தனை தகைமைகளும் ஒருவரிடம் அமைவதெனின் அது ஈஸ்வர கடாட்சத்தின் பாற்பட்டதே - அவர் நாவில் தழும்பேறி நிற்கும் திருமுருக நாமத்தின் வலிமையாகவும் இருக்கலாம்.

வாரியார் அவர்கள் பிறப்பிடம் வடஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள காங்கேயன் நல்லூர். தந்தை மல்லையதாஸ் அன்னை கனகவல்லி தந்தையே வித்யாகுருவாய் அமைந்து வாரியாருக்கு தினமும் நூறு பாடல்களை மனனஞ் செய்து ஒப்புவிக்க வேண்டுமெனும் கண்டிப்பான கட்டளை; இதன் விளைவு தமது பன்னிரண்டாம் வயதிற்குள் பத்தாயிரத்துக்கு மேல் பாடல்களை மனனஞ் செய்து சாதனை படைத்திட்டார்.

1906 ஆம் ஆண்டு பிறந்த வாரியார் தமது பதினெட்டாம் வயதில் விஷாரம் சென்று குர்ஆனை ஓதி முடித்தார். தொடர்ந்து பைபிளைக் கற்று அச்சமய வித்தகரே வியக்க விளக்கம் செய்யலானார். எட்டு வயதிலே வெண்பா பாடும் வல்லமை கைவரப் பெற்றார். தந்தை பிரசங்கம் செய்யவிருந்த நிகழ்விலே தந்தை போக முடியாத ஒரு சமயத்தில் தாம் பங்கு கொண்டு சொற்பெருக்கு ஆற்றினார். பேச்சைக் கேட்டவர் மெய்மறந்தார். அதை ஒழுங்கு செய்தவரோ கிருபானந்தவாரியார் வந்தாலே போது மானது என தந்தையிடம் நேரில் கூறிச் சென்றார். எனில் அவர் நாவாற்றல் நான் விவரிக்க வேண்டியதில்லை. வாரியார் உரை நிகழாத நாளுமில்லை நாடும் இல்லை எனலாம். இருநூறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கொடை வள்ளல் என்ற பட்டம் - காஞ்சிப் பெரியாரால் ஏன் வழங்கப்பட்டது'

தான் பிறந்த ஊர் காங்கேய நல்லூரில் தினமும் பன்னிரண்டு பேருக்கு தானத்திற்கு சிறந்த அன்ன தானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். மண்டினி ஞாலத்துயிர்கட்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்கிறதல்லவா மணிமேகலை. அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலினும், புண்ணியங் கோடிதரும் கல்வித்தானத்திற்கென, பொதுநலநிதி ஒன்றன் மூலம் மாதம் 15 ஆயிரம் ரூபா செலவிடப் படுகின்றது. வள்ளிமலையிலே சரவணப் பொய்கை யமைத்தார். வட ஆற்காடு, பாலாற்றங்கரையோரம் தந்தை உருவாக்கிய முருகன் கோவிலுக்கு திருப்பணிகள் பல செய்தார்.

இந்த தானங்கட்கு எல்லாம் சிகரமாயமைவது திருப்பராய்துறை அருகே அவர் உருவாக்கிய இராம கிருஷ்ண குடில். சுமார் 300 அநாதைக் குழந்தைகளின் புகலிடமான இந்தப் புண்ணிய அமைப்பு 23 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டது. வாம தேவசிவம் - இது இவருடைய தீட்சா நாமம் ஆகும். தமது ஞானகுருவாக வாரியார் வரைந்து கொண்டவர் வாக்குக்கு அருணகிரியானவர், திருப்புகழ் அமிர்தம் எனும் தலைப்பில் தொடர் உபநியாசங்களை செய்தவர். அவரது திருப்புகழ் விரிவுரை என்ற நூல் குறளுக்குப் பரிமேலழகர் உரைபோல நிறையுடையது. இந்நூலில் அவர் வருமாறு முன்னுரை தருகிறார்.

இத்திருப்புகழ் உரை வளநூலை எம் குருநாதர் அருணகிரிப் பெருந்தகைக்கு அர்ப்பணிக்கின்றேன். அவர் இதனை இன்னும் இனிதாக்கி ஆறுமுகப்பெருமானது அடிமலர்கட்கு அணிவிப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியின் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

## கடவுளிடத்திலே, தொடக்கத்திலே அச்சம் இருக்க வேண்டும்

ஆண்டவன் அகிலாண்ட நாயகன்; சர்வ வல்லமைகளும் உடையவன்; நம்முடைய தலைவன். நாம் மனவாக்குக் காயங்களால் புரியும் குற்றங் குறை, குணங்கள் எல்லாவற்றையும் அறிகிறான். ஆகவே கடவுளிடத்தில் ஒவ்வொருவருக்கும் அச்சம் இருக்க வேண்டும்.

ஒரு நூறு ரூபாய் சம்பளம் தருகிற முதலாளியிடம் தொழிலாளிக்கு அச்சம் இருக்கிறது. ஆண்டவன் நம்மிடம் ஒரு பயனும் கருதாமலேயே இந்த உடம்பு, உலகம், கதிர், மதி, கனல், புனல், காற்று, ஆகியவற்றை தந்துள்ளார். அளவில்லாத ஆற்றலுடைய இறைவன் எங்கே?

அந்த பரமபதியினிடம், பயந்து நடக்க வேண்டும். அதற்கு அப்பால், அன்பு தோன்றும். இறைவனுடைய எல்லையில்லாத கருணையை நினைத்து நினைத்து உள்ளம் உருகி, அன்பு செய்ய வேண்டும்.

இறைவன் நம்பொருட்டு, மலசலம் நிறைந்த உடம்பைப் பொற்கோயிலாக நினைத்து இதில் உறைகிறான்.

குளிக்காமல் இருந்தும், ஆடு மாடுகளின் உடம்பு நாறுவதில்லை. நாம் அன்றாடம் குளித்தும், இந்த உடம்பு நாறுகிறது. ஆடு மாடுகளின் மலசலம் அதிகம் நாறுவதில்லை மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலையாகிய இந்தப் புலால் உடம்பில், எம்பெருமான் நம்பொருட்டு எழுந்தருளியிருக்கிறான். அந்தக் கருணையை நினைத்து, அன்புடன் மேவிட வேண்டும்.

உலகில், குழந்தைகளுக்குத் தாய் தந்தையரிடம் தொடக்கத்தில் அச்சம் உண்டாகிறது. ஏதாவது நாம் குற்றம் புரிந்தால் அப்பா அடிப்பார், அம்மா தண்டிப்பாள் என்று தான் எண்ணுகின்றன. வயது முதிர்ந்த பின் அம்மா அப்பா அடிப்பார்கள் என்ற அச்சம் ஏற்படுவதில்லை. தாய் தந்தையருக்கு முன் அச்சத்தால் அடங்கியிருந்தவர், இப்போது அன்பினால் அடங்கியிருக்கின்றனர்.

இதுபோல் உயிர்களாகிய நாம், உயிர்க்கு உயிராகிய பரமபதியிடம் அச்சமும் அன்பும் கொண்டு உய்வு பெறவேண்டும். திருக்கோயில்களில் இரண்டு வகையான உபசாரங்கள் நடைபெறும்; ஒன்று ராஜோபசாரம். இது அச்சத்துடன் புரிவது. மற்றொன்று தேவோபசாரம்; இது அன்புடன் புரிவது.

அச்சம், அன்பு என்ற இந்த இரண்டும் வடமொழியில் பயபக்தி எனப்படும்.

பயபக்தி ஒருவனுக்கு வந்து, உத்தமமான வழிபாடு புரிவானாயின் அதுவே முக்தியாய விளைந்து விடும்.

நாள் செல்லச் செல்ல, காயே கனியாவது போல், பக்தியே முக்தியாகிறது.

யுகங்கள் நான்கு: கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம், கலியுகம் என்பன.

---

அருணகிரிநாதர் பதினாறாயிரமென்
றுரைசெய் திருப்புகழை ஓதீர்—பரகதிக்கஃ
தோணி அருட்கடலுக் கேற்றம் மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக்காம்.

இந்த அரியசாதனை பற்றிய கருத்து—வருமாறு:

''எத்தனையோ பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறையினர் ஒன்றுகூடி, ஆய்வுசெய்து அரும் பெருந் தமிழ்ப் பாடலுக்கு உயிர் நாடியான உட்பொருளைக் காணவேண்டியதான அரும்பெரும் பணியை வாரியார் சுவாமிகள் ஒருவரே செய்து காட்டியுள்ளார் - 50 ஆண்டுழைப்பு தமிழ்ஞானம், பழுத்த அனுபவம் - இவைதந்ததே இந்த நூல்''

வாரியார் அவர்கள் வெளியிட்ட திங்கள் ஏடு 'திருப்புகழ் அமிர்தம்' அவ்வப்போது இந்த ஏட்டிலும் பிறபதிப்புகளிலும் பிரசுரமான கட்டுரைகளின் அழகியதோர் தொகுப்பு—

''கட்டுரைக் கனிகள்'' — எதையும் கதையில் சொல்லி மனதில் பதிப்பதில் வாரியாருக்கு நிகர் அவரே—இதனால்தான கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்றாற்போல் — வாரியாரைக் கதைச்சக்கரவர்த்தி என அழைத்தனர். இந்த நூலில் அவர் வாசகங்கள் சில:

''உடம்பை வளர்ப்பது உணவு, உள்ளத்தை அற நெறிகள் வளர்க்கும்; உயிரை சமயஞானம் வளர்க்கும் வெள்ளத்தனையதே மலர் உயரும், உள்ளம் உயரும் அளவே மனிதன் உயர்வான்''......

சித்தம் அழகியாரைத்தான் — நம் மனங்கள் வேண்டி நிற்கும். தான் பெற்ற இப் பெருமையை தம் பேச்சழகால் — இறுதி மூச்சுவரை உலகுக்களித்து நின்ற பேரருளாளர் வாரியார் மறைந்திட்டார்; இந்தப் பேரிழப்பை, அவர் கணீரென்ற நாத ஒலி பதிந்த பதிவேடுகள் பல ஓரளவு நிறைவு செய்யலாம்; முதிர்ந்த பேரழகின் திருவடிவாய் வந்தமர்ந்து, அருள்வாரி சொரிந்த அனுபூதிச் செல்வரை நாம் மறந்திடலாகுமோ சொல்வீர்........?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருதயுகத்தில் ஞானத்தினால் முக்தி திரேதாயுகத்தில் தானத்தினால் முக்தி. துவாபரயுகத்தில் யாகத்தினால் முக்தி. கலியுகத்தில் பக்தியினால் முக்தி.

பக்தி என்பது வடமொழி. அன்பு என்பது தென் மொழி கடவுள் பக்தி என்ற வலையில் தான் அகப்படுவார்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை இறைவன்.

அன்பு இல்லாத ஒருவன் மனிதன் ஆக மாட்டான். திருவள்ளுவர் அன்பில்லாத ஒருவனைப் பிணம் என்று கூடச் சொல்ல விரும்பவில்லை. பிணம் பலருக்குப் பணம் தரச் செய்து உதவுகிறது. ஆதலால் அன்பில்லாத ஒருவனை என்புதோல் போர்த்த உடம்பு என்கிறார்.

இனி, பக்திக்குச் செல்வம் குலம் ஆகிய இத்தகைய தடையில்லை.

தண்ணீர்ப் பந்தல் வைக்க வேண்டுமானால் செல்வம் வேண்டும். செல்வம் இன்றித் தொடங்கினால் இரண்டு நாள் கூட அந்தத் தருமத்தை நடத்த முடியாது.

பக்தி, பரம தரித்திரர்களும் புரியலாம். மிக்க வறியவராகிய குசேலமுனிவர் பக்தி செய்து திருவருள் பெற்றார்.

தண்ணீர்ப் பந்தல் அமைக்க காலம் வேண்டும்.

ஐப்பசி மாதம் அடைமழை பொழியும் போது ஆற்றோரம் தண்ணீர்ப் பந்தல் வைத்து, ஐயா! நல்ல மோர் பருகுங்கள்'' என்றால், எவன் பருகுவான்? ''அட மூடனே! உனக்கு அறிவில்லையா? இந்த மழையிலா மோர் குடிப்பது?'' என்பான்.

ஆதலால், தண்ணீர்ப் பந்தல் கோடைக் காலத்தில் வைக்க வேண்டும். எனவே தண்ணீர்ப் பந்தல் வைக்க காலம் பார்க்க வேண்டும்.

பக்தி செய்வதற்குக் காலம் தடை புரியாது. மழைக்காலம், வெயிற் காலம், பனிக்காலம், இரவு, பகல், காலை, மாலை எந்த நேரத்திலும் பக்தி செய்யலாம்.

மேலும், தண்ணீர்ப் பந்தல் இடம் பார்த்து வைக்க வேண்டும். ஒரு குன்றின் மீது வைத்து விட்டு, சாலையில் ஒருவன் நின்று, வெயிலில் நடந்து களைத்துப் போன ஒருவனைப் பார்த்து, ''ஐயா, நீர் மோர் பானகம் வேண்டுமா? ''என்றான்.

பிரயாணி, ''ஆம்! நாவறட்சி பொருக்க முடியவில்லை. நீர் மோர் பானகம் எங்கே? கொஞ்சம் கொடுத்து, என் உயிரைக் காத்து உதவும்'' என்றான்.

''ஐயா! அதோ அந்த மலைமீது வைத்துள்ளேன் ''வாரும்'' என்றான்.

''அடப்பாவி! பத்துபேர் நடக்கிற சாலையில் வைக்க கூடாதா? ஐயோ. அந்த மலைமீது ஏறுவதற்குள் என் உயிர் பிரிந்து விடுமே? நீர்மோரே வேண்டாம்'' என்றான்.

ஆனபடியால், இடம் நோக்கி அமைக்க வேண்டும் தண்ணீர்ப் பந்தல்.

இங்கே பக்திக்கு அந்தத் தளையும் இல்லை. எந்த இடத்திலும் பக்தி செய்யலாம்.

பள்ளம், மேடு, காடு, வீடு எங்கிருந்தும் பக்தி செய்யலாம்.

இனி பக்திக்கு குலம் முதலிய தடையும் இல்லை. உயர் குலத்தினர் தான் பக்தி செய்ய வேண்டும்' இழிகுலத்தார் பக்தி செய்தல் கூடாது என்ற நியதி இல்லை.

''இறைவனிடம் பக்தி இல்லாதவர், பெரும் குலத்தில் பிறந்து, பெருஞ் செல்வராகி, எனக்கு மண்ணுலக வாழ்வும், விண்ணுலக அரசும் தந்து உதவி புரியினும், அவரை நானொரு பொருளாக மதிக்க மாட்டேன். சிவபெருமானுடைய திருவடியில் அன்பு வைத்தவர், அங்கம் அழுகிய தொழுநோயராயினும் பசுவை அறுத்துண்ணும் புலையர் குலத்தில் பிறந்தாரெனும், அவர்களே எமது வழிபடு கடவுளர். ஆவார்'' என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அன்பைப் பெற்று விட்டால், அதுவே எல்லாவற்றையும் பெற்று விட்டதாகும்.

அன்புடையார் என்பதையும் பிறருக்கு வழங்குவார்கள்.

அன்பு என்ற பக்தி சித்தியையும் முக்தியையும் தரும் பரமனும் பக்தருக்கு வாய்த்தவராகத் திகழ்கிறார்.

பக்தியினால் விளைந்த விளைவுகளைப் பற்றி ஆதிசங்கரர் வியந்து கூறுகிறார்.

மார்க்கத்தில் தேய்ந்த பழஞ் செருப்பு சிவபெருமானுடைய புருவ நடுவில் சென்றது.

கொப்புளித்து உமிழ்ந்த நீர் அந்தப் பரமனுக்குச் சிறந்த அபிஷேக நீராகியது.

சிறிது கடித்து எச்சில் செய்த புலால் துண்டு உயர்ந்த உணவாக ஆயிற்று.

வேடன் பக்த சிரோமணியாக ஆனான்.

ஆகவே பக்தி எதைத்தான் செய்யாது எல்லா உயர்வையும் தரும்.

பக்தியுடன் பகவானுடைய திருநாமங்களை ஒருமுறை கூறினும் வினைகள் வெந்து நீறாகும் சகல நலன்களும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையின் பிரபல தவில் வித்துவான் சிதம்பரசபாபதியுடனான

# ஓர் சந்திப்பு

சந்திப்பு :- சிவநெறி துணை ஆசிரியர் திரு. க. சவுந்தரராசா அவர்கள்

வணக்கம் திரு. சிதம்பரசபாபதி அவர்களே!

1. திருமலையின் தற்போதைய தவில் கலைஞர்களுள் நீண்டகால அனுபவம் பெற்றவராக விளங்கும் நீங்கள் தவில் கலையிலே ஈடுபாடு கொண்ட காரணம் என்ன?

பதில்: சிரேஸ்ட தராதரம் சித்தியடைந்த நான் 1944 ஆம் ஆண்டு தந்தையாரின் மறைவு காரணமாக குடும்பத்தில் பாரிய கஸ்ரம் ஏற்பட படிப்பை தொடர முடியாமல் தவில் கற்க ஆரம்பித்தேன்.

2. உங்கள் தந்தையாரின் தொழில் என்ன?

அவரும் ஒரு தவில் கலைஞர் தான்.

3. அப்படியானால் தந்தையார் இருக்கும்போதே தவில் கற்க வேண்டுமென நீங்கள் எண்ணவில்லையா?

விரும்பினேன். எனினும் தந்தையார் படிப்பைத் தொடரும்படி கூறியதால் கற்கவில்லை.

4. யாரிடம் நீங்கள் இந்தக் கலையை கற்றீர்கள்?

தந்தையாரிடமிருந்து பார்த்த, கேட்ட அனுபவத்தைக் கொண்டு சுயமாகவே தான் கற்றேன்.

5. உங்கள் குடும்பத்திற்கும் இசைக் கலைக்கும் உள்ள தொடர்பைப் பற்றி கூறுங்கள்.

★ காலஞ்சென்ற எனது தந்தை இரத்தினம் அவர்கள் ஒரு தவில் வித்துவான்.

★ தம்பியான கணேசு ஒரு நாதஸ்வர வித்துவான். இணுவிலில் இருந்த இவர் தற்போது ஜேர்மனிக்குச் சென்றுவிட்டார்.

★ எனது மக்களில் ஒருவர் நாதஸ்வரமும், மற்றவர் தவிலும் கற்றனர். இருவரும் தற்போது வெளிநாடு சென்றுவிட்டனர்

★ எனது மருமகன் வேல்முருகு அவர்கள் ஒரு நாதஸ்வர வித்துவானாக தற்போதும் விளங்குகிறார். அவரது தந்தையும் மிக்க புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான்.

6. இந்தக் கலையுடன் பரம்பரையாகவே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நீங்கள் சிறுபராயம் முதலாக தவிலைக் கற்கவில்லையே. கற்ற பின்னரும் உங்கள் தம்பியாரும் இரண்டு மகன்மாரும் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டனர் இன்றிருக்கும் உங்கள் இளம் சந்ததியினரும் இந்த நாதஸ்வர தவில் கலையை கற்க வேண்டுமெனும் ஆர்வம் கொண்டிருப்பதாக தெரியவில்லை. இவற்றுக்கு நீங்கள் கூறும் காரணம் என்ன?



திரு. சிதம்பரசபாபதி

★ எமது தொழிலுக்குக் கிடைக்கும் வருமானம் குறைவு. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையால் முன்போல இத்தொழிலை செய்யமுடிவதில்லை. சிறப்பாக பாதுகாப்பு நிலையும் போக்குவரத்துச் சூழலும் குறிப்பிடத்தக்கது

★ இளைஞர்களுக்கு ஏற்பட்ட மனமாற்றம் மேற்குறிப்பிட்டவையே இக்கலையில் பின்னடைவை ஏற்படுத்தும் காரணங்களாகும்.

7. அண்ணளவாக பத்து வருடங்கட்கு முன் மக்களிடையே உங்கள் இசைக் கலைக்கு இருந்த ஆதரவுக்கும் பத்து வருடங்கட்கு பின்னர் இருக்கும் மக்கள் ஆதரவுக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா?

உண்டு முன்னர் மக்களுக்கிருந்த ரசிகத் தன்மையை விட தற்போது எமது நேரடிக் கச்சேரிகளில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் ரசிப்பதை நான் அவதானிக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திருமலையில் உங்கள் ஆரம்ப காலத்தில் இருந்த தவில் குழுக்கள் எத்தனை?
அண்ணளவாக எட்டுக் குழுக்கள் இருந்தன.

9. இப்போது எத்தனை குழுக்கள் உண்டு?
சுமார் மூன்று குழுக்கள் மட்டுமே இன்று உள்ளன.

10. முன்னருக்கும் தற்போதைக்கும் உங்கள் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவதில் வேறு பாடு உண்டா?
ஆம் முன்னர் ஆலயங்களிலும், வீட்டின் மங்கள நிகழ்ச்சிகளிலும் கட்டாயம் எமது கச்சேரிகள் நடைபெறும். ஆனால் தற்போது ஆலயங்களில் விசேட நிகழ்ச்சிகள் அல்லது விசேட தினங்களின் போது மட்டும் கச்சேரி இடம் பெறும். அருமையாகவே ஒருசில வீடுகளில் மங்கள நிகழ்ச்சிகளிலும் நேரடிக் கச்சேரிகள் இடம் பெறுகின்றன.

11. சரி தற்போது மக்கள் ஆர்வத்துடன் ரசிப்பதை காண்பதாக கூறினீர்களே. எனினும் தற்சமயம் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவது குறைவு எனவும் கூறுகிறீர்களே. ஏன் இந்த முரண்பாடு? காரணம் யாது?
ஆலயங்களில் மக்கள் ரசிக்கிறார்கள் தான். எனினும் சிறப்பாக ஒலிப்பதிவு நாடாக்களின் வருகை வீடுகளில் எமது கச்சேரிகள் இடம்பெறுவதை தடுத்தே விட்டன என்று கூறலாம்.
விசேட நிகழ்ச்சிகளின் போது பெருமளவானோர் சினிமாப் பாடல்களையே ஒலிப்பதிவு நாடாக்கள் மூலமாக பயன்படுத்துகின்றனர். இதுவும் எமது கச்சேரிகள் இன்று இடம்பெறாமைக்கு ஒரு காரணமாகும்.

12. முன்பு நீங்கள் அவதானித்த தவில் நாதஸ்வரக் கலைஞர்கட்கும் தற்போது அவதானிக்கும் கலைஞர்களுக்கும் இடையே கலை தொடர்பாக ஏதாவது மாற்றங்களை நீங்கள் காண்கிறீர்களா?
ஆம். முன்வர் இராகம், தாளம் என்பவற்றை சிறப்புரக் கற்றுத் தேர்ந்தவர்களே கச்சேரிக்களில் கலந்து கொள்வார்கள் இப்போ கலையில் தேர்ச்சி பெறாமலே சிலர் கச்சேரிகள் நடாத்துவதை நான் காண்கிறேன்.

13. பயிற்சி பெறாமலே கச்சேரி நடாத்துவதனால் எவ்வாறான தீமைகள் உண்டென நீங்கள் எண்ணுகிறீர்கள்?
சிறந்த பயிற்சியின்றி வாசிக்கும் போது தாளம், இராகம் என்பனவற்றில் தடுமாற்றம் ஏற்படும். இதனால் கச்சேரியில் ஈடுபடும் கலைஞர்கள் சிறப்பாக கச்சேரியை நடாத்த முடியாது அடுத்து மங்களகரத்துக்காக வாசிக்கப்படும் கருவிகளின் ஒலிகள் உரிய முறையாக வாசிக்கப்படாவிடில் அமங்களகரமாக இருக்கும். இது கச்சேரி இடம்பெறும் நோக்கத்தையே தவறான தாக்கி விடும்.

14. அப்படியானால் கலைஞர்களை உருவாக்கும் பொருட்டும் அவர்களை மேம்படுத்தும் பொருட்டும் பயிற்சி வகுப்புக்களை நடத்தலாமல்லவா?
சில வருடங்களிற்கு முன் அப்படியாக ஒரு வகுப்பை ஆரம்பித்தேன். அது மாணவரின் ஒத்துழைப்பு இன்மையால் தொடர முடியாமல் கைவிடப்பட்டது. பெற்றோரும் இதற்கு ஊக்கம் தரவில்லை.

15 நிதியுதவி இருந்தால் கலைஞர்களை மேற்படுத்தும் பயிற்சி வகுப்புக்களை நடாத்தலாம் என நீங்கள் கருதினால் அதற்கு திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை உதவத் தயாராக இருக்கிறது. உங்கள் அபிப்பிராயம் என்ன?
பெருமளவு நிதி தேவையில்லை. கற்போர் ஆர்வத்துடன் வந்தால் நாம் பயிற்சி வகுப்பை தொடர தயாராக உள்ளோம்.

16. இத்தொழில் மூலம் கிடைக்கும் வருமாணம் தற்போது உங்கள் வாழ்க்கைவை நடாத்த போதுமானதாக இருக்கிறதா?
மிகுந்த சிக்கனத்துடன் நடந்தால் மட்டுமே வருவாய் போதுமானதாகும்.

17 ஆன்மீக உணர்வூட்டும் ஆலயங்களுடன் இணைந்து நிற்கும் ஓர் தெய்வீகக் கலையே இது தற்காலத்தில் சில கலைஞர்கள் ஆலயத்துள் சினிமாப் பாடல்களை நாதஸ்வரம் மூலம் இசைக்கிறார்களே. இதுபற்றி உங்கள் கருத்து என்ன? அப்படியானவர்கட்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்?
சினிமாப் பாடல்களை ஆலயத்துள் இசைப்பது ஆன்மீக உணர்வை, ஆலய புனிதத்தை அவமதிக்கும் செய்கையே. சினிமாப் பாடல் ஆலயத்துள் பாட வேண்டாம் என்று தான் கலைஞர்களுக்கு நான் கூறுடவன். சிலர் இளம் சந்ததியினரை கவர்வதற்காகவும் அவர்களஅ வேண்டுகோளுக்கிணங்கவும் சினிமாப் பாடல்மள் இசைப்பதை நான் காண்கிறேன்.

18 சில கலைஞர்கள் ஆலயத்தினுள் மதுவருந்திவிட்டு நின்று கச்சேரி செய்கிறார்களே. இவர்களுக்கு நீங்கள் கூறவிரும் அறிவுரை என்ன?
புனிதமான ஆலயத்துள் மதுபோதையுடன் கச்சேரி செய்யக்கூடாது. இச்செயல் தெய்வீகமான எமது கலைக்கு ஓர் இழுக்காகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருக கிருபானந்தவாரியாரின் நினைவுப் பேருரை

# "போயிடுமா"?

— கவிஞர் தாமரைத் தீவான் —

அருளார்ந்த அவைமுதல்வர், அறமார்ந்த பெரியோர்கள்,
அவைமுன் உள்ளோர்,
பொருளார்ந்த பொழிவாளர், புறமுள்ளோர் - அகமுள்ளோர்
பொதுவாய் யார்க்கும்
இருளார்ந்த நெஞ்சகத்தே ஒளியாராச் செய்தோர்தம்
இரங்கல் நாளில்
ஒருநான்கு கவிமூலம் உரையாற்ற வந்தோனின்
உயர்ந்த வாழ்த்தே!

அறமார்ந்த தமிழ்நாட்டில் ஆர்காட்டு நல்லூரில்
ஆறாம் ஆண்டில்
மற - மான மல்லையர் கனகத்தாய் பெற்றபெரு
மகனாய் வந்தே,
திறமான தமிழ் - பள்ளி செல்லாமலே கற்றும்,
செய்யுள் யாத்தும்,
உறவான அமிர்தத்தை உயர்வாழ்க்கைத் துணையாக்கி
உளமீர்த்தாயே!

பெறவில்லை யானாலும் "கோடி" யினை மகனாகப்
பெற்றாளாக்கி,
குறமாதைக் கொண்டோனைப் புகழ்ந்தானை ஞானத்
தின் குருவாய்க் கொண்டே,
உறவாகிப் பலரோடும் பொழிந்தூற்றும் முகிலாகி
ஊரெல்லாம் போய்,
மறவாத தந்தையாலே மனச்செய்யில் செவியூடு
மடையானாயே!

அருள்பொழியும் அர "சைப்போல் ஆறேமு பட்டம்
கொண் டமிர்தமான
திருப்புகழை இதழாக்கி ஆறாறாண்டெங்கெங்
கும் திரியச் செய்தும்
இருநூறு வரையான நூல் யாத்தும் வெளிநாடு
ஏகி மீண்டும்
கிருபையினால் ஆனந்த வாரியெனும் மஞ்சத்தில்
கிடத்தினாயே!

இப்புவியில் எண்பத்தி எட்டாண்டு வாழ்ந்தோர்கள்
இருந்த போதும்
எப்போதும் தமிழாக, எந்நாளும் இசையாக
எவர் வாழ்ந்தார்கள்?
தப்பாத தமிழ் கொண்டு சீனமக்கும் சென்றாயே
தருணம் பார்த்தே
அப்பாழும் கூற்றுவனும் ஆவியினைக் கவர்ந்தானோ
ஆகாயத்தே!

## ஞானியா?

—செல்வி செ. ஜெயச்செல்வி—

நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா
பாசவலையில் விழ்ந்து மீளாத
பறவையான நானெல்லாம்
ஞானியானால் நாடுதான்
உருப்படுமா?

ஆசைகளோ ஒரு கோடி
அலைகின்றேன் அதைத்தேடி
கோடிகளைத் தினம் தேடி
தேசமெல்லாம் சென்றலையும்
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

பொல்லாத ஓர் ஆமை
பொறாமை என்கின்ற
அவ் ஆமை குடிகொண்ட
ஆலயமாய் நானிருக்க
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

பொல்லாப்பு இல்லாத
பொறையுடையோர் ஞானியென்பர்
பொறை இங்கு உறையாத
அனலாக நானிருக்க
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

அன்பென்ற மூன்றெழுத்தே
ஞானியர் தம் உயிரென்பர்
வன்பென்னும் உடலெழுத்து
வாழுகின்ற நானெல்லாம்
மெய்ஞானம் பேசிவிட்டால்
நாடுதான் உருப்படுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி தொறும் வானொலியில் ஆன்மீகச் சொற்பொழி
வாம் விருந்து தன்னை
அள்ளி அள்ளி இசைபோடும் அழகாகத் தந்தாயே
அவற்றை உண்டுண்
டுள்ள மெலாம் நிறைத்தோமே, ஆனந்த வாரிதியில்
ஊறினோமே,
வள்ளலது கிருபையினை இங்கினியார் தருவாரோ
வாரி வாரி?

ஐயா நீ அறியாத நூலுண்டோ — கவியுண்டோ?
ஆய்ந்து பார்த்தால்
கைலாயன் நூல்தொட்டுக் கவி வைரமுத்து வரை
கற்றே உள்ளாய்!
பொய்யல்ல திருமுருகன் புகழ் — அவனின் கிருபையினால்
பொழியும் போதில்
மெய் சிலிர்க்கும்! நகையினையும் இடையிடையே
செவிவைப்பாய் — மீண்டும் உண்டோ?

நாவலன் நீ, பாவலன்நீ, நகையோடும் பழஞ்சரிதம்
நவிலுவோன் நீ,
காவலன் நீ, தமிழ்த்தாயின் கதைகூறி அன்னவளைக்
காத்தவன் நீ!
பூவலஞ் செய்துரங்கும் புராணத்துக் கதை சொன்ன
புண்ணியன் நீ!
ஆவலுறும் பக்தர்களை ஆற்றிடையில் விட்டதுதான்
அடுக்காதையா!

போனாலும் பல் — விட்டே போகாத தமிழ்கொண்டுன்
பொக்கைவாயால்
தேனாகச் சிரித்தாயே செவிமூல முண்டுண்டே
தியங்கினோமே!
போனாயே தெய்வத்தில் புதுக் காட்சியும் காட்டிப்
புனிதத்தொண்டு
ஏனின்னும் போதாதோ, எழுபத்தைந்தாண்டின்மேல்
என்று தானோ?

கன்னனொடு கொடைபோகக் கம்பனொடு கவிபோகக்
கதாப்ரசங்கம்,
உன்னுடனே போயிடுமோ? உந்தனிடம் வெற்றிடமோ?
உரையாய் சற்றே!
என்னைப் போல் எத்தனைபேர் இங்குள்ளோம் உந்
தனது இசையில்மூழ்க?
எந்நாளில் வருவாயோ? இராக்கனவில் "கணீ"ரொலியை
எழுப்பிடாயோ?

பூச்சழகா பொட்டழகா புன்சிரிப்பாம் வாயழகா
புராண வாழ்வின்
பேச்சழகா பாட்டழகா பெருமாலை மார்பழகா
பெருமான் பக்தி
வீச்சழகா நூலழகா வேலழகன் புகழ் அழகா
வீரச் சைவை
மூச்சழகா, போனாலும் போகாவே உன் அழகு
முழுதும் தானே!

அகிம்சை என்ற ஆயுதத்தை
ஆழுகின்றோர் ஞானியென்பர்
அழிக்கின்ற ஆயுதத்தை
ஆவலுடன் அணைக்கின்ற
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும்
நிலைமயங்கார் ஞானிகளும்
புகழிலே தான் மயங்கி
இகழிலே அழுங்குகின்ற
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

ஐம்புலனும் அகத்தடக்கி
ஆளுகின்றோர் ஞானியென்பர்
புலன் சென்ற வழியெல்லாம்
புரளுகின்ற மனமுடைய
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

காமமும் மோகமும்
அறியாதோர் ஞானியென்பர்
காமமோ கட்டவிழ்க்க
மோகமோ கட்டி வைத்த
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

நல்லதிது கெட்டதென
ஞானியர்க்கு வேறில்லை
உள்ளவைகள் யாவையுமே
நானிலத்தே பிளவு செய்யும்
நானெல்லாம் ஞானியானால்
நாடென்ன உருப்படுமா?

எல்லோரும் ஓர் இனமே
எல்லோரும் ஓர் குலமே
ஒன்றாக வாழுதலே
ஒற்றுமையே எம் குணமே
மேலோரும் இங்கில்லை
கீழோரும் இங்கில்லை

எல்லோர்க்கும் நானடியேன்
என்ற குணம் ஞானியர்க்கு
ஜாதி மத பேதம்
ஞாலத்தில் தினம் காட்டி
எல்லோரும் எமக்கடியார்
என்பதிலே மனம் மகிழும்
நானெல்லாம் ஞானியானால்
ஞானியர்க்கு வேறு பேரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டியையும் அரசனையும் அம்பொன்னும் ஓடுமென
அகத்தால் பார்த்தே
மீண்டுமிவன் வாராத மேனிலைக்கோ நீ போனாய்?
மிகு பிறப்பைத்
தாண்டியதில் வென்றாலும், தமிழ்க்கொடையில் வென்
றாலும், சமயசின்னம்
பூண்டதிலே வென்றாலும் பூவுலகில் எமைவிட்டே
போகலாமோ?

பூவுலகில் புராணங்கள் உள்ளவரை நீ வாழ்வாய்
பொருள் பொதிந்த
பாவுலகில் இசைசேரும் பாங்குள்ளவரை உன்பேர்
பரந்து நிற்கும்
நாவுலகில் சைவத்தின் நல்லதமிழ் உள்ளவரை
நன்றி சொல்வார்!
மூவுலகின் அரசான உன்அருளை எந்நாவும்
பொழிந்தே தீரும்!

வாரிஎனில் கடலையா, வாரிஎனில் விளைவையா,
வருவாய் ஐயா!
வாரி எனில் கூட்டையா, வாரிஎனில் ஆய்வையா,
வெள்ளம் ஐயா!
வாரிஎனும் கடல்கூட மழையாகி உனக்கிரங்க
வந்து போனால்,
ஆரையா உன்புகழின் அடிமுடிகள் கண்டறிவார்?
ஆகாதையா!

தேவர்களும் உன்இசையைச் செவிமடுக்கக் காத்தி
ருந்து செய்தவேலை
சாவெனவும் வந்ததுவோ? தமிழமுதம் அவர்கட்கும்
சாப்பாடாமோ?
நாவமுதம் உண்ணாரே நத்தமிழின் செவியமுதம்
நன்றிருந்தால்!
போவதும் நம்நாள் ஆயின் புறப்படுவோம் அக்குவரப்
பொழிவீர் ஐயா!

திருநாளைப் போவாரைத் தெரியாதோர் ''நந்த'' ரெனும்
சேதிகேட்டால்
ஒருநாளும் மறவார்கள் ''பவபந்தம்'' அறுமிடத்திற்
குடனே போவார்!
வருநாளும் கதைப்பாடல் வளரட்டும் உப்பெயரால்
வதிப்பீர் ஆசீ!
''முருகன் அருள்வர வாழ்வோம்'' எனச்சொல்லி இத்துடனே
முடித்தேன் — நன்றி!

அறிவு என்பது குருடே. அதனால் இயங்க முடியாது, அதற்குக் கைகளோ கால்களோ இல்லை. உணர்ச்சியே செயல்படுகிறது; இது மின் சக்தியையிடவும் பிறசக்திகளைவிடவும், அதிக வேகத்துடன் செயல்படுகிறது. நீ உணர்ச்சி நிறைந்தவனா என்பதுதான் கேள்வி. உணர்ச்சி மிகுந்தவனானால் கடவுளை நீ காண்பாய்.

— சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் உலகு

# சமயகுரவர்

| பெயர் | திருநாவுக்கரச நாயனார் | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | சுந்தரமூர்த்தி நாயனார் | மாணிக்கவாசக சுவாமிகள் |
|---|---|---|---|---|
| தந்தையார் பெயர் | புகழனார் | சிவபாதவிருதயர் | சடையனார் | சம்புபாதாசிரியர் |
| தாயார் பெயர் | மாதினியார் | பகவதியார் | இசைஞானியார் | சிவஞானவதி |
| நான்கு பாதங்கள் | சரியை | கிரியை | யோகம் | ஞானம் |
| இறைவனை வழிபட்ட முறை | இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும் | இறைவனை தந்தையாகவும் தன்னை மகனாகவும் | தோழனாக | இறைவனை குருவாகவும் தன்னை சீடனாகவும் |
| மார்க்கம் | தாசமார்க்கம் | சற்புத்திரமார்க்கம் | சகமார்க்கம் | சன்மார்க்கம் |
| முத்தி | சாலோகம் | சாமீபம் | சாரூபம் | சாயுச்சியம் |
| வயது | 81 | 16 | 18 | 32 |
| குருபூசை தினம் | சித்திரைசதயம் | வைகாசிமூலம் | ஆடிசோதி (சுவாதி) | ஆனிமகம் |
| நாடு | திருமுனைப்பாடி நாடு | சோழநாடு | திருமுனைப்பாடி நாடு | பாண்டிநாடு |
| ஊர் | திருவாமூர் | சீர்காழி | திருநாவலூர் | திருவாதவூர் |
| முதற்பாடிய பாடல் | "கூற்றாயின வாறு" | "தோடுடையசெவியன்" | "பித்தாபிறை சூடி" | நமச்சிவாய வாழ்க |
| கடைசியாக பாடிய பாடல் | "எண்ணுகேன் என்சொல்ல" | "காதலாகிகசிந்து" | "தலைக்குத் தலைமாலை" | திருக்கோவையார் |
| பிறபெயர் | மருணீக்கியார், நாவுக்கரசர், சொற்கோ, வாக்கின்வேந்தர் அப்பர், வாகீசர், உழவாரப்படையாளி, தாண்டகவேந்தர், ஆளுடைய அரசு, | பாலறிவாயர், ஆளுடையபிள்ளையார், கவுணியர்கோன், தென்புகலிவேந்தன், பரசமயகோளரி, காழிவேந்தர். | நம்பியாரூரர், ஆளுடையநம்பி, வன்றொண்டர், தம்பிரான்தோழர் சிங்கடியப்பன், வனப்பகையப்பன். | திருவாதவூரர், தென்னவன பிரமராயன். |

# சிவாலயங்கள்

| சிவாலயப் பெயர் | அமைந்துள்ள இடம் | இறைவன் பெயர் | இறைவி பெயர் | தீர்த்தம் |
|---|---|---|---|---|
| திருக்கோணேஸ்வரம் | திருக்கோணமலை | கோணேஸ்வரநாதர் | மாதுமைஅம்பாள் | பாபநாசம் |
| திருக்கேதீச்சரம் | மன்னார் | கேதீஸ்வரநாதர் | கௌரியம்பாள் | பாலாவி |
| நகுலேஸ்வரம் | யாழ்பாணம் | நகுலேஸ்வரர் | நகுலாம்பிகை | நகுலகிரி |
| முன்னேஸ்வரம் | சிலாபம் | முன்னேஸ்வரநாதர் | வடிவாம்பிகை | மாயவனாறு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் மதமும்

— ஆனந்தம் —

எமது இந்து சமயமானது ஆதியும் அந்தமும் இல்லாதது. தொன்மையானது கட்டுப்பாடு குறைந்தது. இவ்வாறு இனனோரன்ன பொருட்பதங்களை பாவிக்கக் கூடிய ஒரு சிறந்த பெருமைவாய்ந்த சமயமாகும் என்பது நான் சொல்லத் தேவையில்லை. சகலரும் அறிந்த ஒன்றே.

இருந்தாலும் எமது சமயத்தில் உள்ள சிலர் பற்றில்லா முறையிலே வேறு சமயங்களுக்கு மாறுகின்றனர். வேறு சமயங்களில் உள்ளவர்கள் கூட மாறுகின்றார்கள் தான், எதற்காக மாறுகின்றார்கள். என்று சற்று சிந்திப்போமானால்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். அதாவது பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும். உள்ள பற்றுக்களை விட்டொளிப்பதற்கே அப்பற்றை பற்ற வேண்டும்.

மனிதனுடைய மனமானது நிலையானது அல்ல ''மனம் ஒரு குரங்கு'' என்று சொல்லிவிட்டார்கள். தாமரை மேல் தண்ணீர் போன்று அலைந்துகொண்டேயிருக்கும். பலரில் சிலர் சிந்தனையை நெறிப்படுத்துவதில்லை. மனம் போன போக்கிலே செல்கின்றார்கள். பற்றில்லாதவர்களாக அலைகின்றார்கள்.

உதாரணமாக எமது சமயத்தின் பண்பாடான ஒரு விடயத்தை எடுத்துப் பார்ப்போம். நாங்கள் ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடி தூய்மையான ஆடை அணிய வேண்டும் என்பது மரபும் நியதியும் ஆகும். இது ஒரு சின்ன விடயம் இதில் பொதிந்து கிடக்கும் உண்மைகளோ அர்த்தங்களோ பல இங்கே பார்க்கலாம். தூய்மையான ஆடை எமக்கு ஒரு உண்மையைச் சொல்லுகின்றது. நாம் ஆலயத்திற்குச் செல்லும் போது மேற்கூறப்பட்டவாறு செல்வதனால் நாம் எமது நெஞ்சிலே எந்த விதமான வஞ்சனை சூது இன்றி எதுவித அழுக்குமின்றி இந்த ஆடைகளைப் போன்று தூய்மையான மனதுடனே இறைவனிடம் செல்கிறோம். என்பதுடன் தூய்மையான ஆடையைப் போன்று மனமும் தூய்மையாகவே இருக்கின்றது என்பதைக் காட்டுவதாகவே இந் நியதியால் விளங்கிக் கொள்ளக் கூடியதாய் உள்ளது.

இவற்றை அறிவதற்கு பெரிதாக அறிஞராகவோ கல்விமானாகவோ இருக்க வேண்டும் என்பதில்லை சற்று அந்த விடயத்தை மனதில் போட்டு ஆராய்வோமானால் இவ்விடயத்தை அறியக்கூடிய நிலைமையை நாம் அடைவோம். நம்மில் எத்தனைபேர் இதைச் செய்கிறோம் எல்லாம் ஓட்டைக் குடத்தில் நீர் போலவே செல்கின்றன.

அதே நேரம் மனிதர்களாகிய எம்மைப்பொறுத்தவரை மனிதர்களாகப் பிறப்போர் எல்லோரும் நல்லவரே! உதாரணமாக கடலை எடுத்துப்பாருங்கள் அது மிகவும் அமைதியானது தெளிவானது ஆனால் அதனை அதன் சுற்றுச் சூழல் நிலைகளான கால நிலைகளே மாற்றியமைக்கின்றன. காற்று வந்து அலையை உருவாக்கி கொந்தளிப்பை ஏற்படுத்துகிறது. அருவி வந்து அழுக்கைச் சேர்க்கிறது. இவ்வாறே மனிதனிலும் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மலங்களினாலும் கட்டுண்டு மாற்றமடைகின்றான்.

கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவான்
நற்றாள் தொழா அர் எனின்''

அதாவது தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன என வள்ளுவர் பெருந்தகை இரண்டு வரியிலே அழகாக கூறியுள்ளார்.

அத்தோடு மட்டுமல்லாமல் ''நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்குமாங்கே பொசியுமாம்'' என ஔவைப்பாட்டி சொன்னதற்கிணங்க மனிதர்களும் பலர் இறைவனை பூசிக்காமல் இருப்பினும் ஒருசிலர் பூசித்து இறைவனின் அனுக்கிரகம் பெறுவதனால் இவர்களது வணக்கத்தால் இவர்களைச் சோந்தவர்களுக்கும் அந்த பலன் சேரக்கூடியதாக இருக்கின்றது இதன் அடிப்படையிலேயே தற்சமய நாட்டின் நிகழ்வுகளின் பலாபலன்களும் நிகழ்கின்றது. என்று சொல்வது கூட சாலப்பொருத்தமாகும்.

அதனோடு மட்டுமல்லாமல் எமது சமயத்திலுள்ள இன்னுமொரு விடயமான விரதங்களில் ஒன்றான நவராத்திரி விரதத்தை எடுத்துக்கொண்டால் இந்நிகழ்வு அண்மையிலே இந்து மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது இதில் கூட பல அர்த்தங்களை நாங்கள் காணலாம். அதில் ஒன்று இந்து சமயத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு பெறுபேறுக்கும் நன்றியுடையவர்களாக இருப்பவர்கள் என்பதை கூட இந்த நவராத்திரி விரதம் காட்டுவதாகக் கொள்ளலாம் முடிந்த வருடத்தில் வீரத்தைத் தந்தருளிய துர்க்காவுக்கு மூன்று நாளும் முறையே செல்வம், கல்வியை தந்தருளிய இலக்குமி, சரஸ்வதிக்கு மும்மூன்று நாட்கள் விரதம் அனுஷ்டிக்கிறோம் இதன் மூலம் எனது நன்றிக் கடன்களை அத் தெய்வங்களுக்கு செலுத்துவதாக கூறலாம் அத்தோடு விவசாயிகளுக்கு மழையைத் தந்தருளியதற்கு காரணமான சூரியனுக்கு நன்றி செலுத்துமுகமாக தைப்பொங்கல் விழா எடுக்கின்றோம். இவைகளை எல்லாம் பார்க்கும்போது இந்துக்கள் மிகுந்த நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் எந்த விடயத்திற்கும் ஆனால் இதை எத்தனை பேர் சிந்திக்கின்றனர், உணர்கின்றனர். மாறாக எமது சமயம் ஒரு வெற்றுச் சமயமாக கருதுகின்றனர்

அடுத்ததாக இன்னுமொன்றான நவராத்திரி விரதத்தின் பிரதான உண்மையொன்றை இங்கு ஆராய்வோமானால் மூன்று நாள் விரதத்திற்கு அதிபதியான துர்க்கா தேவியையும், மற்றைய மூன்று நாள் செல்வத்திற்கு அதிபதியான இலக்குமி தேவியையும், அடுத்த மூன்று நாள் கல்விக்கதிபதியான கலைத் தெய்வம் சரஸ்வதியையும், வழிபட்டு அடுத்து வரும் விஜயத்தசமி நாளிலே கும்பம் எடுத்து கன்னி வாழை வெட்டப்படுகின்றதே இதனுடைய அர்த்தம் என்ன முழுமையாகச் சிந்தித்தோமா?

ஆனால் பலராலும் சொல்லப்படுவது ஒன்று இறுதி நாளான விஜயதசமி நாளிலே இம்மூன்று சக்திகளும் ஒன்றாகி அர்த்தநாரீஸ்வரியாக வடிவம் கொண்டு மக்களை வாட்டிவதைத்த மகிடா சூரனை வதம் செய்து அவனை அழித்து மக்களுக்கு அருள் செய்வதாகவே.

ஆனால் விளக்கமாக இன்னும் சொன்னால்! மகிடா சூரன் என்று வர்ணிக்கப்பட்ட சூரனையும் மீறிய பண்போடு மனிதனைப் பற்றி நின்று வாட்டி வதைக்கின்ற மும்மலங்களில் ஒன்றான ஆணவ மலத்தை ஒவ்வொரு மனிதனிலும் இருந்து அழித்துக் கொள்வதாகவே கொள்ளப்படும்.

ஏனெனில் வீரம், கல்வி, செல்வம் போன்ற இம் மூன்று பிரதான நலன்களையும் எல்லாம் வல்லப் பரம்பொருளிடம் விரதம் இருந்து பெற்ற இந்த அற்ப மனிதன் தன்னகத்தே கொண்டிருக்கும் மகிடா சூரனான ஆணவத்தால் மறுகணமே இறைவனை, சக மனிதர்களை மதிக்காமல் ஏன் தன்னையும் கூட மதியாமல் துள்ள ஆரம்பித்து விடுவான்.

இதனால் இப்படிப்பட்ட நலன்களைப் பெற்ற மனிதன் தன்னகத்தே கொண்டுள்ள இந்த மகிடா சூரனை அழிக்க வேண்டும். அவ்வாறு அகற்றி தன்னை உண்மையான குணம் பொருந்திய மனிதனாக்கிக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே இந்த அற்ப மனிதனுக்கு ஞாபகப்படுத்த இந்த கன்னி வாழை வெட்டப்படுகின்றது.

## சிவநெறி சிறுவர் வட்டம்



முழுப்பெயர்: செல்வன்/ செல்வி:-

..........................................................

..........................................................

வகுப்பு:-.................வயது:-..................

பாடசாலையின்பெயர்:-.................................

மாவட்டம்:-..........................................

வீட்டு முகவரி:-.....................................

..........................................................

மாணவரின் கையொப்பம்:-...........................

..........................................................

அதிபரின் கையொப்பம்:-............................

..........................................................



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி.

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமய கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் திருக்கோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்றோர்

01. பண்ணிசை மேற்பிரிவு — முதலாம் இடம்:
செல்வி சின்னப்பு, ராதா
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், இந்து மகளிர்
அறநெறிப் பாடசாலை
சீனக்குடா

02. பேச்சு: மேற்பிரிவு — முதலாம் இடம்.
செல்வி கணபதிப்பிள்ளை, சூரியகுமாரி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், இந்து மகளிர்
அறநெறிப் பாடசாலை
சீனக்குடா
கோலம் போடுதல் — முதலாம் இடம்:

03. செல்வி தியாகராசா, மங்களகௌரி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் இந்து மகளிர்
அறநெறிப் பாடசாலை
சீனக்குடா

04. பேச்சு: கீழ்ப்பிரிவு — முதலாம் இடம்:
செல்வி குமாரசாமி, அருந்தவநிதி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், இந்து மகளிர்
அறநெறிப் பாடசாலை
சீனக்குடா

01. பண்ணிசை கீழ்ப்பிரிவு — முதலாம் இடம்:
செல்வி சிவபாதசுந்தரம், தமிழ்ச்செல்வி
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை
அறநெறிப் பாடசாலை
திருக்கோணமலை

02. பண்ணிசை மத்தியப்பிரிவு — முதலாம் இடம்:
செல்வி அப்புத்துரை விக்னேஸ்வரி
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை
அறநெறிப் பாடசாலை
திருக்கோணமலை

03. கட்டுரை மத்தியப்பிரிவு — முதலாம் இடம்:
செல்வி சிவபதம், மங்கயற்கரசி
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை
அறநெறிப் பாடசாலை
திருக்கோணமலை

## இந்து சமய வினா விடைப் புதிர் - 09

### சரியான விடைகள்

01. விபூதி, உருத்திராட்சம்,

02. அக்கினி.

03. ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச், சந்தியாவந்தனம் முதலியன முடித்துக் கொண்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம் முதலியன வைக்கப்பட்ட பாத்திரத்தை தாமே எடுத்துக் கொண்டேனும். பிறரால் எடுப்பித்துக் கொண்டேனும், வாகனாதிகளின்றி நடந்து போதல் வேண்டும்.

04. திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தவனம் வைத்தல், பத்திர புஸ்ப மெடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்த தூபமிடல், திருவிளக்கேற்றுதல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல், பூசைத் திரவியங்கள் கொடுத்தல் என்பனவைகளாகும்.

05. அழகிய சிற்றம்பலமுடையார்.

06. விசாரசர்மர்.

07. திருமால்.

08. வீரபத்திரர்.

09. திருநாவுக்கரசு நாயனார்.

10. அழித்தல் தத்துவத்தை உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினா விடைப் புதிர் - 10

இந்து சமய தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் அறியும் பொருட்டு இதன்கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்.

01. படைத்தலாவது யாது?

02. சரியை என்றால் என்ன?

03. உண்மை விளக்கம் என்ற நூலை அருளிச் செய்தவர் யார்?

04. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?

05. நீர்ப்பூக்கள் மூன்று தருக?

06. வைரவருக்கு ஆகாத புஸ்பம் எது?

07. பஞ்சகவ்வியம் என்பது என்ன?

08. மெய்கண்ட தேவரின் குருபூசைத் தினம் எது?

09. சிவனுக்குரிய விரதங்கள் ஆறு தருக?

10. அன்பாவது யாது?

குறிப்பு:- இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதினால் மாத்திமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பெயர்:

முகவரி:

முடிவுத் திகதி: 28 - 02 - 1994

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர்,
'சிவநெறி'
தி. மா. இ. இ. பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை

## இந்து சமய வினா விடைப் புதிர் - 09

### பரிசு பெற்றோர் விபரம்:

01. வே. சுரேஸ்குமார்
தி/இ. கி. ச. ஸ்ரீ. கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி,
திருக்கோணமலை.

02 க. இந்திராணி
25, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

03. க. கமலாசனி
25, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

04 கோ. மதியழகன்
வர்ணமேடு, தம்பலகாமம்.

05. கா. வடிவேல்
மத்தியவீதி, பட்டித்திடல் தோப்பூர்.

### ஆறுதல் பரிசு:

01. விஜிதா சுந்தரராஜன்
63. இராஜவரோதயம் வீதி,
திருக்கோணமலை.

02. சி. சாந்தகுமார்
தி/இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

03. க. இந்துசா
பட்டித்திடல் தோப்பூர்.


## சந்தா விபரம்

"சிவநெறி" முத்திங்கள் ஏடு

ஆண்டுச் சந்தா — 50/- ரூபா (அஞ்சல் செலவுடன்)
தனிப் பிரதி — 10/- ரூபா
ஆயுள் சந்தா — 1000/- ரூபா

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஆசிரியர்
சிவநெறி
தி. மா. இ. இ. பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி
திருக்கோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிக்கு எமது வாழ்த்துக்கள்

# NISSCO IMPEX

IMPORTERS & DEALERS IN SUNDRY GOODS
MANUFACTURERS OF
DRAWING BOOKS, MONITOR EXERCISE BOOKS & STATIONERY
ETC. APPROVED DEALERS FOR NATIONAL
PAPER COMPANY

**No. 76/6, New Moor Street,**
**COLOMBO - 12.**

**Phone : 436653**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிக்கு எமது வாழ்த்துக்கள்

# NELCO AGENCY

(AGRO SERVICE CENTRE)

DEALERS IN AGRO CHEMICALS SPRAYERS
VEGETABLE SEEDS ETC·

Tel: 440469
434333

223 1/5, Central Road,
COLOMBO - 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும் சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆகும்.

## இதன் வளர்ச்சிக்குத் தாராளமாக உதவுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறி வளர வாழ்த்துகின்றோம்

# BOOK CENTRE

PROPRIETORS: **ALL CEYLON DISTRIBUTORS INVESTMENTS LTD.**

**"Than Building"**

***371, Dam Street, Colombo-12***

Telephone: 34529, 541099
Telex: 22703 ACDIL CE
Cable/Telegrams: "KENNEDIES" Colombo
Post Office Box No. 96

*Branches:*

**BOOK CENTRE**
U. G. 100, FLOOR
People's Park Shoping Complex
**COLOMBO 11 T.P. 430346**

**BOOK CENTRE**
81, ARMOUR STREET
**COLOMBO 13**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org